Registered as a Newspaper

பக்கங்கள்
16
விலை
ரூ. 50

# உதயன்

சுடர் : 38
கதிர் : 222
வியாழக்கிழமை 06 ஜூலை 2023
... வள்ளுவர் ஆண்டு 2054

வடக்கைப் பலப்படுத்த

# புலம்பெயர் தமிழர்களே முதலிட முன்வாருங்கள்!



## ஆளுநர் அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 6

எமது மாகாணத்தை பொருளாதார ரீதியில் முன்னோக்கிக் கொண்டு செல்ல வேண்டும். அதுவே பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள எமது பகுதியை மீட்டெடுக்க நம்மிடம் உள்ள ஒரேயொரு உபாயம். புலம்பெயர் தமிழர்களின் முதலீடுகளை அதிகரித்தல், சுற்றுலாத்துறையை மேம்படுத்தல் என வடக்கு மாகாணத்தின் பொருளாதாரத்தை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கான திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. மாகாணத்தின் முன்னேற்றத்துக்காக அனைத்துத் தரப்புக்களும் இவ்வாறான நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும். »15

## 'புதன்கிழமை மக்களுக்காகவே!'

ஆளுநர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 6
வாரந்தோறும் புதன்கிழமைகளில் பொதுமக்கள் தன்னைச் சந்திக்க முடியும் என்றும், அதற்கு எவ்விதமான முற்கூட்டிய நேரம் ஒதுக்குகைகளும் மேற்கொள்ளத் தேவை »15

## இனிமேல் தினசரி விமான சேவை

யாழ்ப்பாணம், ஜூலை 6
யாழ்ப்பாணம் - சென்னை இடையிலான பயணிகள் விமான சேவை தினசரி சேவையாக மாற்றப்படவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. »15



முல்லைத்தீவு தேவிபுரத்தில்

## கரும்புலிகள்நாள் நினைவேந்தல்

முல்லைத்தீவு, ஜூலை 6
முல்லைத்தீவு, தேவிபுரத்தில் ஒழுங்கமைக்கப்பட்ட இடத்தில் நேற்று கரும்புலிகளுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. »15

புலிகளை மீளுருவாக்க முயற்சி

## சிவரூபனுக்கு எதிரான வழக்கு செப். 4ஆம் திகதி ஒத்திவைப்பு


கிளிநொச்சி, ஜூலை 6
பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு, நீதிமன்றில் பிணை வழங்கப்பட்டுள்ள மருத்துவர் சி.சிவரூபன் தொடர்பான வழக்கின் சாட்சியங்களைப் பதிவு செய் »15

## தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் பதவியேற்பு

கொழும்பு, ஜூலை 6
தேர்தல்கள் ஆணைக்குழுவுக்குப் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள »15

## முல்லையடி விபத்தில் சிறுவன் சாவு!

கிளிநொச்சி, ஜூலை 6
பளை, முல்லையடியில் ஏ-9 வீதியில் நேற்று புதன்கிழமை இரவு நடந்த விபத்தில் சிறுவன் ஒருவர் சம்பவ »15






கேப்பாபிலவில்

## காணியை விடுவிக்குக மக்கள் ஆர்ப்பாட்டம்!

முல்லைத்தீவு, ஜூலை 6
கேப்பாபிலவில் இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகளை விடுவிக்க வலியுறுத்தி பொதுமக்கள் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர். »15

## ஞாயிற்றுக்கிழமைகளில் விடுமுறை; மாவட்டச் செயலருடன் மீளப்பேச்சு!

தனியார் கல்வி நிலைய உரிமையாளர்கள் முடிவு

யாழ்ப்பாணம், ஜூலை 6
வெள்ளி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் தனியார் கல்வி நிறுவனங்களுக்கு விடுமுறை வழங்குவது தொடர்பில் மீண்டும் யாழ். மாவட்டச் செயலரைச் சந்தித்துக் கலந்துரையாடுவதற்கு தனியார் கல்வி நிலையங்களின் உரிமையாளர்கள் தீர்மானித்துள்ளனர்.
நேற்று தனியார் கல்வி நிலையங்களின் உரிமையாளர்கள் நல்லூரில் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியிருந்தனர்.
அதில் 50க்கும் அதிகமான கல்வி நிலையங்களின் உரிமையாளர்கள் கலந்துகொண்டனர். »15

## வவுனியா விபத்தில் இளைஞர் உயிரிழப்பு

வவுனியா, ஜூலை 6
வவுனியாவில் விதை உற்பத்திப் பண்ணைக்கு அண்மையில் ஏ-9 வீதி [illegible] நேற்று »15

## வெளிநாடு அனுப்புவதாக மோசடி: தலைமறைவான நபர் சிக்கினார்

யாழ்ப்பாணம், ஜூலை 6
வெளிநாடு அனுப்புவதாகத் தெரிவித்து 40 இலட்சம் ரூபா பண மோசடி செய்த குற்றச்சாட்டில் ஒருவர் யாழ்.மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவால் கைது செய்யப்பட்டுள்ளார். »15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திக்கம் வடிசாலை உரிமம் தனியாருக்கு தாரைவார்ப்பு

## சுரேஷ் பிரேமச்சந்திரன் குற்றச்சாட்டு

**யாழ்ப்பாணம், ஜூலை 6**

**திக்கம் வடிசாலையின் உரிமம் பனை அபிவிருத்திச் சபைத் தலைவரால் பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த தனிநபரொருவருக்கு வழங்கப்பட்டுள்ளது. இது கூட்டுறவுத்துறையை முடக்கும் செயலாகும். இவ்வாறு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் வெளியிட்ட ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.**

அதில் மேலும் உள்ளதாவது: பனை மரத்தைப் பற்றியோ அதன் பயன்பாடு பற்றியோ அறியாத சிங்கள மொழிபேசும் தென் பகுதியைச் சார்ந்த ஒருவர் பனை அபிவிருத்திச் சபையின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இது தவறானது. வடக்கு - கிழக்கில் பனைவளத்துடன் ஈடுபாடு கொண்ட இளையோர் தவிர்க்கப்பட்டு பனை அபிவிருத்தி சபைக்கு சிங்கள இளையோரை உள்வாங்கியிருப்பது சபை கீழ்நோக்கிச் செல்ல வழிவகுக்கும். பனை அபிவிருத்திச் சபையின் தலைமைச் செயலகம் யாழ்ப்பாணத்தில் இருந்த போதிலும்கூட, பல இலட்ச ரூபா வாடகையில் கொழும்பில் இன்னொரு தலைமைச் சங்கம் இயங்கிவருகிறது.


திக்கம் வடிசாலைக்கான உரிமம், பனம் சாராயத்தை உற்பத்தி செய்வதற்கான உரிமம், அவற்றைக் களஞ்சியப்படுத்துவதற்கும் விற்பதற்குமான உரிமம் ஆகியவை பனை அபிவிருத்திச் சபையின் தலைவரால் பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த தனிநபரொருவருக்கு அளித்துள்ளதாக அறிய முடிகிறது.

பனை வளச் சங்கங்கள் சமாசங்கள், அதன் கூட்டுறவு நடவடிக்கைகள் அனைத்தையும் முடக்கி சகல வருமானங்களையும் ஒரு தனிநபருக்கு அளிக்க முற்பட்டமையானது ஒட்டுமொத்த பனை அபிவிருத்தி முயற்சியையும் சீர்குலைக்கும் - என்றுள்ளது. (ச-இ)



# ‘முத்து’வுக்கு தாய்நாட்டில் தீவிர சிகிச்சை

நன்கொடையாக இலங்கைக்கு வழங்கப்பட்ட ‘முத்துராஜா’ என்றழைக்கப்படும் ‘சக்சுரீன்’ யானை உரிய பராமரிப்பின்றி நோய்வாய்ப்பட்டதையடுத்து தாய்நாடான தாய்லாந்து ‘முத்துராஜா’வை மீளப் பெற்று, சிறப்பு சிகிச்சை அளித்து வருகின்றது. (ச)



# கொத்து, உணவுப்பொதி விலைகள் குறைந்தன!

கொத்து மற்றும் உணவுப்பொதியின் விலை நேற்றுப் புதன்கிழமை முதல் 10 வீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது என இலங்கை உணவக உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது.

எரிவாயு, எரிபொருள் மற்றும் கோதுமைமா ஆகியவற்றின் விலையில் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தால் இந்த விலை குறைப்பு செய்யப்பட்டுள்ளது என அதன் தலைவர் அசேல சம்பத் தெரிவித்தார். (ச-ரி2)

# வயிற்றில் 3 சிசுக்களுடன் கர்ப்பிணிப் பெண் சாவு!

## ராகமவில் சோகம்

எட்டு வருடங்கள் குழந்தையில்லாதிருந்த பெண்ணொருவர் 3 சிசுக்களைப் பெற்றெடுக்கத் தயாரான நிலையில் ராகம மருத்துவமனையில் உயிரிழந்துள்ளார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தில் பட்டதாரியும் ஆசிரியருமான 36 வயதான கர்ப்பிணித் தாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இதுதொடர்பில் பெண்ணின் கணவர் தெரிவிக்கையில்,

பிரசவத்துக்காக ராகம மருத்துவமனையில் எனது மனைவி சேர்க்கப்பட்டார். இரண்டாவது நாள் மனைவி மற்றும் மூன்று குழந்தைகளும் இறந்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. மருத்துவமனையின் அலட்சியத்தால் இந்த அசம்பாவிதம் நிகழ்ந்துள்ளது - என்றார்.

இதுதொடர்பில் ராகம போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் ரணவீர தெரிவிக்கையில்,

கருவில் இருந்த குழந்தைகளும் தாயும் இறந்தமை மருத்துவமனையின் தவறு அல்ல. தாயாருக்கு பல வருடங்களாக குழந்தை இல்லாமல் இருந்த நிலையில், குழாய் மூலம் கருப்பையில் கருமுட்டை பொருத்தி கர்ப்பிணியாகியுள்ளார். கருவுற்று இருபது வாரங்களில், அவர் கடுமையாக நோய்வாய்ப்பட்டு இங்கு சேர்க்கப்பட்டுள்ளார். தாயையும் அவரது குழந்தைகளையும் காப்பாற்ற மருத்துவமனை ஊழியர்கள் கடுமையாக உழைத்தனர் - என்றார். (ச-இ)

# அக்கிராசனுக்கு பொங்கல்



கிளிநொச்சி அக்கராயன் சந்தியிலுள்ள அக்கிராசன் மன்னனின் திருவுருவச் சிலைக்கும் வணக்கம் செலுத்தும் நிகழ்வும் பொங்கல் நிகழ்வும் நேற்று புதன்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் மற்றும் கரைச்சிப் பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர், பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றனர். (ச-ரி3

# நயினாதீவில் விகாராதிபதிக்கு மக்கள் மலர்தூவி மரியாதை



நயினாதீவு நாகதீப ராஜமகா விகாரையின் விகாராதிபதி நவதகல பதும கீர்த்தி திஸ்ஸ நாயக்க தேரரின் பொன் விழாக் கொண்டாட்டம் சர்வமதங்களின் பங்கேற்புடன் நேற்று புதன்கிழமை நயினாதீவு மணிமேகலை அரங்கத்தில் இடம்பெற்றது.

நயினாதீவு மண்ணில் 50 வருடங்களாக மக்களுக்கு ஆற்றிய சேவையை கௌரவிக்கும் வகையில் நயினாதீவு மக்களால் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

பௌத்த பீடங்களின் தேரர்கள், நூற்றுக்கணக்கான பிக்குகள் மற்றும் நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய பிரதம குரு உள்ளிட்ட சர்வமதத் தலைவர்களின் பங்கேற்புடன் நிகழ்வு இடம்பெற்றது.

வீதியில் இரு மருங்கிலும் மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கூடி, விகாரதிபதிக்கு மலர்தூவி மரியாதை செலுத்தினர். (ச-20-125-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# விபத்து சம்பவங்களால் தினசரி 35 பேர் மரணம்

## தேசிய விபத்து தடுப்புப் பிரிவு தெரிவிப்பு

**கொழும்பு, ஜுலை 6**

**நாட்டில் நாளொன்றுக்கு 32 முதல் 35 பேர் வரையில் விபத்துச் சம்பவங்களில் சிக்கி உயிரிழக்கின்றனர் என தேசிய விபத்து தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.**

இதுதொடர்பில் அதன் முகாமைத்துவ வேலைத்திட்டத்தின் முகாமையாளர் விசேட மருத்துவர் சமித சிறிதுங்க தெரிவிக்கையில்;

நாட்டில் ஒவ்வொரு மூன்று மணிநேரத்துக்கும் நிகழும் விபத்துக்களால் 4 பேர் மரணிக்கின்றனர்.

வருடமொன்றுக்கு 10 ஆயிரம் முதல் 12 ஆயிரம் பேர் வரையில் வாகன விபத்துக்களில் உயிரிழக்கும் அதேவேளை, 10 லட்சத்துக்கும் அதிகமானோர் அரச மருத்துவமனை களில் சிகிச்சை பெறுகின்றனர்.

அத்துடன் நாளொன்றில் 32 முதல் 35 பேர் வரையில் விபத்துச் சம்பவங்களால் உயிரிழக்கின்றனர். வாகன விபத்துகள், உயிர்மாய்ப்புக்கள், நீரில் மூழ்குதல், மின்சாரத் தாக்கங்களுக்கு இலக்காகுதல் உள்ளிட்ட காரணிகளால் இந்த மரணங்கள் சம்பவிக்கின்றன.

இதனைத் தடுப்பதற்குப் பொதுமக்கள் மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டும்- என்றார்.

(ச-22)




**முந்தி சாமி வரம் குடுத்தாலும் பூசாரி குறுக்க நிக்கிறார் எண்டுவினம். இப்ப காஸ்காரன் விலையைக் குறைச்சாலும் கடைக்காரர் குறுக்க நிக்கினம். லிட்ரோ காஸ் திரும்ப விலையைக் குறைச்சிருக்கு. அப்பிடி விலை குறையப் போகுது எண்டு முதலே நியூஸ் வந்திட்டு. அப்பிடி தகவல் கிடைச்ச அடுத்த செக்கனே, புதிசா சிலிண்டருக்கு கடைக்காரர் ஓர்டர் குடுக்காமல் கனகடையளில ரண்டுமூண்டு நாளா சிலிண்டருக்கு தட்டுப்பாடு. முக்கியமா யாழ்ப்பாணத்தில உள்ள உள்ளூர்க் கடையளில தான் இந்த நிலைமை.**

**பழைய விலையில சிலிண்டரை வாங்கினால், விலைகுறைஞ்சதும் அவைக்கு நட்டம் வருமெண்டு இப்பிடிச் செய்யிறது ஒருவகையில நியாயம் தான். ஆனால் கதை என்னெண்டால், அந்த சிலிண்டர்கள் சனம் வாங்கினதால இல்லாமல் போகேலை. விலை குறையப் போகுது எண்டால் எங்கட சனமும் கொஞ்சம் பொறுத்துத்தானே வாங்குவினம். சனத்தின்ர 'றிக்ஸ்' கடைக்காரருக்கும் விளங்கும் தானே. இல்லாட்டி யாழ்ப்பாணத்தில கடைவைச்சு உழைக்க முடியுமோ? சனங்கள் எத்தன் எண்டால் கடைக்காரர் எத்தனுக்கு எத்தன். அவை காஸ் விலை குறையப் போகுது எண்டு தெரிஞ்சவுடன, எல்லா சிலிண்டரையும் உள்ளுக்க கொண்டு போய் வைச்சிட்டு, 'சிலிண்டர் முடிஞ்சிது' எண்டு கையை விரிச்சிருக்கினம். 'சரி அப்பிடி முடிஞ்சால் ஏஜென்சிக்கு ஓர்டர் குடுக்க வேண்டியதுதானே?' எண்டு கேட்டால், 'ஸ்ரொக் முடிஞ்சுதாம். இனி கொழும்பில இருந்துதான் வரோணுமாம்' எண்டு உதட்டையும் பிதுக்குவினம். இன்னும் கேட்டால் என்னென்னத்தை இனிப் பிதுக்குவினமோ எண்ட பயத்தில சனமும் அதை நம்பிடும். பிறகு 'உங்களுக்கு மட்டும் சிலிண்டர் தரலாம். ஆனால் விலை கொஞ்சம் கூட' எண்டு கள்ளக்குரலில ஒரு தூண்டில் போடுவினம். அதில சிக்கிறவையிட்ட முதல் இருந்த விலையை விட இன்னும் கொஞ்சம் கூடுதலா வைச்சு வித்துப் போடுவினம். இப்பிடி விலை குறைஞ்சாலும் அதைப் பாவிச்சு முந்தின விலையை விட கூட்டி விக்கிற கெட்டித்தனம் எங்கட கடைக்காரருக்குத்தான் இருக்கு.**

**அப்பிடியும் சிலிண்டர் வித்து முடியமுதலே காஸ் விலை இறங்கி, எல்லாக் கடையளிலையும் தாராளமா சிலிண்டரைக் கொண்டந்து இறக்கினாலும் உள்ளூர்க் கடைக்காரர் அப்பவும் இறங்கிவர மாட்டினம்.ஏனெண்டால் அந்தப் பகுதிக்குள்ள அவையின்ர கடையில மட்டும் தான் சிலிண்டர் இருக்கும். தூரப் போய் வாங்கிற அளவுக்கு சிலிண்டர் ஒண்டும் சின்னச்சாமான் இல்லையே. அதால கிட்டவுள்ள கடையிலதானே வாங்க ஆக்கள் நிப்பினம். இதைப் பாவிச்சு 'சிலிண்டர் இருக்கு. ஆனால் பழைய விலைதான். கொம்பனிக்காரரே சொல்லிப் போட்டாங்கள் இதுகளைப் பழைய விலைக்கு வித்தால்தான் புதிசைக் கொண்டு வருவினமாம்.' எண்டு அவை படிக்கிற புராணத்தை நம்பி, பழைய விலையிலேயே சிலிண்டரை வாங்கிறவைதான் கூடப்பேர்.**

**ஒருவேளை காஸ் விலை ஏறினால், கொம்பனி அறிவிக்கமுதலே விலையை இவை ஏத்திப்போடுவினம். கடைக்காரருக்கு விலையை இறக்கச் சொன்னால் கோபம், ஏற்றச்சொன்னால் புளுகம் இப்பிடியான எல்லாவழியிலையும் உழைக்கத் தெரிஞ்ச உள்ளூர் பில்கேட்ஸ்கள் இருக்கிற நாட்டில எப்பிடிப் பொருளாதார நெருக்கடி வந்தது எண்டுதான் தெரியாமல் கிடக்கு.**



- பட்சி

# மின்கம்பத்துடன் மோதி கட்டடப் பணியாளர் சாவு!

## வரணியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜுலை 6

வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் மின்கம்பத்துடன் மோதியதில் அதில் பயணித்த இளைஞரொருவர் உயிரிழந்துள்ளார்.

கொடிகாமம் பருத்தித்துறை வீதியில் சுட்டிபுரம் அம்மன் கோயிலடியில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இந்த விபத்து நடந்துள்ளது. வடமராட்சி, தேவரையாளி பகுதியைச் சேர்ந்த புஸ்பராசா ராஜ்குமார் (வயது- 29) என்பவரே உயிரிழந்தவராவார்.

கட்டுமான நிறுவனமொன்றின் பணியாளரான குறித்த இளைஞர் பணைத்த கட்டுமானப் பணி தொடர்பாக சென்றுவிட்டு மோட்டார் சைக்கிளில் வீடுதிரும்பும்போது வேகக்கட்டுப்பாட்டை இழந்து மின்கம்பத் துடன் மோதியதில் விபத்து நேர்ந்துள்ளது என கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர். சடலம் சாவகச்சேரி மருத்துவ மனையில் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.



(ச- 9,159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரஹரா கலாசாரத்திலிருந்து யானைகளை நீக்கப் பரப்புரை

## அஸ்கிரிய பீடாதிபதி கண்டனம்



கொழும்பு, ஜூலை 6
பெரஹெரா கலாசாரத்திலிருந்து யானைகளை அகற்றுவதற்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் திட்டமிட்டுப் பரப்புரை செய்து வருகின்றன என்று அஸ்கிரிய பீடாதிபதி நாரம்பனாவே ஆனந்த தேரர் கண்டனம் வெளியிட்டுள்ளார்
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
தாய்லாந்தால் வழங்கப்பட்ட முத்துராஜா யானை, விகாரையொன்றில் வைத்து மோசமாக நடத்தப்பட்டமையை (துன்புறுத்தப்பட்டமையை) தொடர்ந்து அந்த யானையை திரும்பப் பெற்றுள்ளது தாய்லாந்து.
இதையடுத்தே விகாரைகளால் யானைகள் துன்புறுத்தப்படுவது போன்ற கருத்தியலை ஏற்படுத்தி பெரஹெரா கலாசாரத்திலிருந்து யானையை நீக்கும் பரப்புரைகள் தீவிரமாக முன்னெடுக்கப்படுகின்றன. வன உயிரிகள் திணைக்களத்தின் கருத்தின்படி யானைகள் - மனிதர்கள் இடையிலான மோதலால் தான் ஏராளமான யானைகள் உயிரிழக்கின்றன.
ஆனால், வளர்ப்பு யானைகள் துன்புறுத்தப்பட்டு இன்னமும் இறக்கவில்லை. ஆதலால், பெரஹெரா கலாசாரத்திலிருந்து யானைகளை விலக்கும் பரப்புரைகளுக்கு எதிராக மக்கள் ஒன்றுபட வேண்டும் - என்றார். (ம)

### தாய்லாந்தால் வழங்கப்பட்ட மேலும் இரு யானைகளின் உடல்நிலை குறித்து ஆய்வு

கொழும்பு, ஜூலை 6
தாய்லாந்திலிருந்து இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட மேலும் இரு யானைகளின் உடல்நிலை தொடர்பில், சிறப்புக் குழுவொன்று ஆராய்ந்து வருகின்றது என்று தாய்லாந்து ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.
இதன்படி, கதிர்காமத்தில் உள்ள விகாரை ஒன்றுக்கு வழங்கப்பட்ட யானை நல்ல தேக ஆரோக்கியத்துடன் இருப்பதாகவும், கண்டியில் உள்ள விகாரைக்கு வழங்கப்பட்ட யானை வேறு இடத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் குழுவினர் உறுதிப்படுத்தியுள்ளனர் என்றும் அந்த ஊடகங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (ம)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** உற்சாகமான நாள். சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். புதிய முயற்சிகளை மட்டும் தவிர்த்துவிடவும்.

**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டிய நாள். சிறுசிறு சங்கடங்கள் ஏற்படக்கூடும். அனுசரித்துச் செல்வது நல்லது.

**மிதுனம்:** மனதில் வீண் குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். குடும்பத்தில் சிறு சங்கடம் ஏற்படக்கூடும் என்றாலும், அதனால் பாதிப்பு எதுவும் இருக்காது. முக்கியமான முடிவு எடுப்பதை தவிர்த்துவிடவும்.

**கடகம்:** புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. காரியங்கள் இழுபறியாகும். குடும்பத்தில் சில குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். பணவிரயத்துக்கு வாய்ப்பு உண்டு.

**சிம்மம்:** எதிலும் வெற்றியே ஏற்படும் நாள். எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**கன்னி:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். எதிர்பார்த்த காரியம் தாமதமானாலும் முடிந்துவிடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தாயின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும்.

**துலாம்:** தன்னம்பிக்கையுடனும் துணிச்சலுடனும் செயற்படுவீர்கள். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். உடல்நலனில் கவனம் செலுத்தவும். புதிய முயற்சிகளில் நன்கு சிந்தித்து ஈடுபடவும்.

**விருச்சிகம்:** தேவையான பணம் இருந்தாலும் தேவையற்ற செலவுகளும் ஏற்படும். முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். உறவினர்களால் காரியங்களில் அனுகூலம் ஏற்படும்.

**தனுசு:** நல்ல வாய்ப்புகள் எதிர்ப்படும் நாளாக அமையும் வாழ்க்கைத்துணையின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். மகிழ்ச்சியான செய்தி கிடைக்கும். மகிழ்ச்சியுடன் செயற்படுவீர்கள்.

**மகரம்:** குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை ஏற்படும். உறவினர்களால் செலவுகள் ஏற்படும். பிடிவாதப்போக்கு மாறும். ஏற்பட்டிருந்த மனவருத்தங்கள் நீங்கும் .

**கும்பம்:** சாதிக்கும் நாளாக அமையும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். உங்கள் அறிவுரை ஏற்றுக்கொள்ளப்படும். தேவைகளை நிறைவேற்றுவீர்கள். செலவுகள் அதிகரிக்கலாம்.

**மீனம்:** அனுகூலமான நாளாக இருக்கும். எதிர்பார்த்த காரியம் சாதகமாக முடியக்கூடும். தந்தையின் மூலம் ஆதாயம் கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்புண்டு.

## வீட்டில் கள் விற்பனை; ரூ.30,000 அபராதம்!

யாழ்ப்பாணம், ஜூலை 6
மானிப்பாய் பகுதியில் வீடொன்றில் வைத்து சட்டவிரோதமாக கள் விற்பனை செய்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டவருக்கு 30 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.
வீட்டில் கள் விற்பனை இடம்பெறுவதாக பொலிஸாருக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை வழங்கப்பட்ட தகவலுக்கமைய சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் சந்தேகநபர் ஒருவரைக் கைது செய்ததுடன் அவரிடமிருந்து 10 லீற்றர் கள்ளையும் மீட்டனர்.
சந்தேகநபர் நேற்றுமுன்தினம் மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். குற்றம் ஒப்புக்கொள்ளப்பட்டதையடுத்து அவருக்கு 30 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து நீதிமன்று தீர்ப்பளித்தது. (ச-ரி2, 125)

## வைரவர் உற்சவம்

யாழ்ப்பாணம், ஜூலை 6
கோப்பாய் வடக்கு இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் வைரவர் உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது. வைரப்பெருமாளுக்கு சிறப்பு அபிஷேகம், பூசைகள் இடம்பெற்று மடைபரவி வழிபடும் நிகழ்வும் நடைபெறும். (ச-17)

## பருத்தித்துறை- தெல்லிப்பழையில் கண்புரையாளர்கள் தெரிவு முகாம்

யாழ்ப்பாணம், ஜூலை 6
தெல்லிப்பழை, பருத்தித்துறை பகுதிகளில் கண்புரை சத்திர சிகிச்சை செய்ய வேண்டிய தேவையுள்ள நோயாளர்களைத் தெரிவு செய்யும் இலவச கண் பரிசோதனை முகாம் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் இடம்பெறவுள்ளது.
பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட நோயாளர்களுக்கு பருத்தித்துறை ஆதார மருத்துவமனையிலும் தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட நோயாளர்களுக்கு தெல்லிப்பழை மருத்துவமனையிலும் நடைபெறவுள்ளது என்று யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார். (ச-ரி2)

## கசிப்புடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 6
ஆனைக்கோட்டையில் ஒரு லீற்றர் கசிப்பை வைத்திருந்த குற்றச்சாட்டின் கீழ் ஒருவர் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார் என மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். பொலிஸாருக்கு கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கமைய இந்தக் கைது இடம்பெற்றது. சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-ரி2, 125)

## உடைமையில் கசிப்பு; 15,000 ரூபா தண்டம்!

யாழ்ப்பாணம், ஜூலை 6
கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட இளைஞருக்கு மல்லாகம் நீதிமன்றம் 15 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதித்து தீர்ப்பளித்துள்ளது.
கடந்த ஞாயிற்றுக்கிழமை ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் 1.5 லீற்றர் கசிப்புடன் 28 வயதுடைய சந்தேகநபரை கைதுசெய்தனர்.
சந்தேகநபர் நேற்றுமுன்தினம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் குற்றத்தை ஏற்றுக்கொண்டதையடுத்து அவருக்கு 15 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்தது. (ச-ரி3-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடைமையில் ஹெரோய்ன்; மானிப்பாயில் மூவர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 6
மானிப்பாயில் உயிர்கொல்லி போதைப்பொருளான ஹெரோய்னை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். பொலிஸாரால் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட வீதிச் சோதனையின்போது இந்தக் கைது இடம்பெற்றது. 18,26 மற்றும் 24 வயதான இளைஞர்களே போதைப் பொருளுடன் கைதுசெய்யப்பட்டனர். (ச-ரி3-125)

# மீனவர்களின் உரிமையை பறிப்பது ஏற்புடையதல்ல!

## வழிவகை செய்வேன் என மைத்திரி யாழில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 6

பாரம்பரிய மீன்பிடித் தொழில் பாதிப்புறும் வகையில் முதலீட்டாளர்களாலும் தொழிலதிபர்களாலும் அமைக்கப்பட்டுவரும் கடலட்டைப் பண்ணைகளால் வடபகுதி பாரம்பரிய மீனவர்களின் உரிமைகள் அழிக்கப்படுகின்றன. இது ஏற்புடையதல்ல.

இவ்வாறு யாழ்ப்பாணம் வருகை மேற்கொண்டிருந்தபோது மேற்கொள்ளப்பட்ட ஊடக சந்திப்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கில் அதிகரிக்கும் கடலட்டைப் பண்ணைகளால் பாரம்பரிய மீன்பிடியில் ஈடுபடும் வடக்கு மீனவர்கள் பாதிக்கப்பட்டு வருகின்றமை தெளிவாகப் புரிகின்றது.

பாரம்பரியமாக நீண்டகாலமாக தொழில் செய்து வரும் அவர்களின் உரிமைகளைப் பறிக்கும் செயற்பாடே கடலட்டைப் பண்ணைகளை உருவாக்குதல்.

பல்வேறு துன்பங்களை அனுபவிக்கும் வடபகுதி மீனவர்களின் உரிமைகளை அவர்கள் இழக்க சம்மதிக்க முடியாது. இதில் எங்களுக்கு உடன்பாடில்லை.

இந்த விடயம் தொடர்பில் எதிர்காலத்தில் நாடாளுமன்றத்தில் வலியுறுத்தி அவர்களின் வாழ்வதாரத்தை பாதுகாக்க நடவடிக்கை எடுப்போம் - என்றார்.

(ச-125-20-27)






# ஆனைக்கோட்டையில் வெடிபொருள்கள் மீட்பு!

மானிப்பாய், ஜூலை 6

மானிப்பாய் ஆனைக்கோட்டை உயரப்புலத்திலுள்ள காணியொன்றிலிருந்து நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளதாக மானிப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

காணியின் உரிமையாளர் குழியொன்றை வெட்ட முயன்றபோது ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகள் அவதானிக்கப்பட்ட நிலையில் அதுதொடர்பில் மானிப்பாய் பொலிஸ் நிலையத்துக்கு தகவல் வழங்கினார்.

தகவலுக்கமைய காணிப்பகுதிக்கு விரைந்த பொலிஸார் நான்கு ரி-56 ரக துப்பாக்கிகள், ஒன்பது ரி-56 ஆயுதங்கள் மற்றும் தோட்டாக்கள் என்பவற்றை மீட்டனர். இதுதொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

(ச-ரி2-27-125)

# வழமைக்கு வரும்வரை இலவச படகுப் பாதை!

காரைநகர் - ஊர்காவற்றுறைப் நிரந்தர படகுப் பாதை சேவை வழமைக்குத் திரும்பும்வரை அதற்கு மாற்றீடாக இலவச படகுப்பாதைச் சேவை தற்காலிகமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என ஊர்காவற்றுறைப் பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார்.

இந்த இலவச சேவை கடந்த 21ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நாளொன்றுக்கு சராசரியாக 19 ஆயிரம் ரூபா செலவில் இலவச படகுப் பாதைச் சேவை முன்னெடுக்கப்படுகிறது. அதேவேளை படகுப்பாதை சேவையின் திருத்தப் பணிகள் முடிவுற்று வழமைக்குத் திரும்பியதும் குறித்த தற்காலிக இலவச படகுச் சேவை நிறுத்தப்படும் - என்றார்.

(ச-125)

# இராணுவம் வெளியேறிய காணி: மக்களிடம் ஒப்படைக்க பேச்சு



## மாவட்டச் செயலர் தகவல்

**யாழ்ப்பாணம், ஜூலை 6**

**வலி. வடக்கில் காங்கேசன்துறை மேற்கில் இராணுவ முகாம் அகற்றப்பட்டமையால் 30 ஏக்கர் காணி விடுவிக்கப்பட்டுள்ளது. அந்தக் காணியை மக்களிடம் உத்தியோகபூர்வமாக ஒப்படைப்பதற்குரிய பேச்சுக்கள் இராணுவத்தினருடன் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்டச் செயலர் அம்பலவானர் சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.**

காங்கேசன்துறை சிமெந்து ஆலையுடன் இணைந்தாக இராணுவத்தினரின் ஆயுதக் கிடங்கு அமைந்திருந்தது.

அதற்குப் பாதுகாப்பு வழங்கும் நோக்குடன் காங்கேசன்துறை மேற்கு கிராம அலுவலர் பிரிவில் 30 ஏக்கர் காணியில் இராணுவ முகாம் அமைக்கப்பட்டிருந்தது.

அந்த முகாமிலிருந்து கடந்த மாதம் 10ஆம் திகதி இராணுவத்தினர் வெளியேறினர்.

இந்தக் காணிகள் உரிமையாளர்களிடம் எப்போது ஒப்படைக்கப்படும் என்று யாழ். மாவட்டச் செயலர் அ. சிவபாலசுந்தரனிடம் 'உதயன்' கேள்வி எழுப்பியது.

'அந்தக் காணிகளை மக்களிடம் உத்தியோகபூர்வமாக ஒப்படைப்பதற்குரிய பேச்சுக்கள் இராணுவத்தினருடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது' என்று பதிலளித்தார்.

இதேவேளை 2013ஆம் ஆண்டு வலி. வடக்கில் 6 ஆயிரத்து 384 ஏக்கர் நிலப்பரப்பை சுவீகரிப்பதாக அப்போதைய மஹிந்த ராஜபக்ச அரசு அறிவித்திருந்தது. பின்னர் நல்லாட்சி காலத்தில் அவற்றில் கணிசமான காணிகள் விடுவிக்கப்பட்டன. இருப்பினும் காணிகள் விடுவிக்கப்பட்டமைக்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டிருக்கவில்லை. அதனை வெளியிடும் நோக்குடன் விடுவிக்கப்பட்ட காணிகளை அளக்கும் நடவடிக்கை அண்மையில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

இதற்கு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி எதிர்ப்பு வெளியிட்டிருந்தது. 2013ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட வர்த்தமானி முழுமையாக மீளப்பெறப்படவேண்டும் என்று அந்தக் கட்சி சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் வலியுறுத்தியிருந்தார்.

இந்தநிலையில் அளவீட்டுநடவடிக்கையின் முன்னேற்றம் தொடர்பில் பதிலளித்த மாவட்டச் செயலர், முன்னாயத்தப் பணிகள் மாத்திரம் நடக்கின்றன. கள அளவீட்டுப் பணிகள் இன்னமும் ஆரம்பமாகவில்லை. வெகுவிரைவில் ஆரம்பமாகும் - என்றார்.

(ஒ-5-125)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## சீனா - இலங்கை இடையிலான விமான சேவை ஆரம்பம்!

கொழும்பு, ஜூலை 6
சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான விமான சேவையை எயார் சீனா விமான நிறுவனம் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் மீண்டும் ஆரம்பித்துள்ளது.
142 பயணிகளுடன் சீனாவின் செங்டு தியான்ஃபு சர்வதேச விமான நிலையத்திலிருந்து புறப்பட்ட விமானம், கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை நேற்றுமுன்தினம் வந்தடைந்தது.
திங்கள், புதன் மற்றும் வெள்ளிக்கிழமை என வாரத்துக்கு மூன்று தினங்கள் இந்த விமான சேவை இடம்பெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-ரி3)

## ஆசிய அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளராக டக்காஃபோமி



கொழும்பு, ஜூலை 6
ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான புதிய பணிப்பாளராக டக்காஃபோமி கடோனோ நியமிக்கப்பட்டுள்ளார்.
இதுவரை ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளராகப் பணியாற்றிய சென் செனின் பதவிக்காலம் நிறைவடைந்ததை அடுத்து இவர் பதவியேற்றுள்ளார்.
ஜப்பானிய நாட்டவரான டக்காஃபோமி கடோனோ, கிழக்கு ஆசிய பிராந்தியத் துறையில் இளம் நிபுணராக 2006 ஆம் ஆண்டு ஆசிய அபிவிருத்தி வங்கியில் இணைந்து தென் கிழக்காசிய மற்றும் மத்திய பிராந்தியங்களிலுள்ள ஆசிய அபிவிருத்தி வங்கியின் கிளை அலுவலகங்களில் பணியாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-ரி2)

## நெற்கதிர்களில் நிறமாற்றம் விசேட குழுவால் ஆராய்வு

மட்டக்களப்பு, ஜூலை 6
மட்டக்களப்பின் சில பகுதிகளில் நெற்கதிர்களில் ஏற்பட்டுள்ள நிறமாற்றம் தொடர்பில் விசேட குழுவொன்று ஆராயவுள்ளது என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.
கடந்த சில நாள்களாக மட்டக்களப்பின் சில பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட நெற்செய்கையில் நெற்கதிர்கள் கறுப்பு நிறமாக மாறியுள்ளன. அதனால் விளைச்சல் குறைவடையும் அபாயம் ஏற்படலாம் என விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.
அதற்கமைய நெற்கதிர்களில் ஏற்பட்டுள்ள நிறமாற்றம் தொடர்பில் ஆராய்வதற்காக விசேட குழுவொன்று ஈடுபடுத்தப்பட்டுள்ளது என பத்தலேகொட நெல் ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளர் ஜயந்த சேனாநாயக்க தெரிவித்துள்ளார். (ச-இ)

## படையெடுக்கும் சுற்றுலாவிகள்

கொழும்பு, ஜூலை 6
கடந்த ஜூன் மாதம் மாத்திரம் சுமார் ஒரு லட்சம் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.
கடந்த ஆண்டு 7 இலட்சத்து 20 ஆயிரம் சுற்றுலாப்பயணிகள் மாத்திரமே நாட்டுக்கு வந்தனர்.
இந்த வருடத்தில் இதுவரையான காலப் பகுதியில் 6 இலட்சத்து 25 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர்.
கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு கணிசமான அளவு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ குறிப்பிட்டார். (ச-ரி3)

# மதுபானசாலைக்கு எதிர்ப்பு மக்கள் ஆர்ப்பாட்டம்




மன்னார், ஜூலை 6
**மன்னார் நகருக்குள் புதிதாக மதுபானசாலை அமைக்க எதிர்ப்புத் தெரிவித்து பொதுமக்களால் நேற்றுமுன்தினம் காலை கவனவீர்ப்பு ஊர்வலம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.**

மன்னார் முன்னாள் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை அவர்களின் உருவச் சிலை முன்பாக ஆரம்பிக்கப்பட்ட இந்த கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டமானது பிரதான சுற்றுவட்டத்தினூடாக மன்னார் மாவட்டச் செயலகம் மற்றும் மன்னார் பிரதேச செயலகம் வரை சென்று இலங்கை நாட்டின் ஜனாதிபதிக்கான மனு மன்னார் மாவட்டச் செயலாளர் திருமதி அ.ஸ்ரான்லி டி மெல் மன்னார் பிரதேச செயலாளர் ம.பிரதீப்பிடம் கையளிக்கப்பட்டது
கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியிருந்தார்கள் அதில் 'மரணத்தை முன்னிலைப்படுத்தும் மதுபானசாலைக்கு அனுமதி வழங்காதே' 'புதிய மதுபானசாலையால் சமூகச் சீர்கேடு உருவாக வழிவகுக்காதே' போன்ற வாசகங்கள் எழுதப்பட்டிருந்தன.
மன்னார் நகர் மக்கள் செறிந்து வாழும் பகுதியும் மதவழிபாட்டுத் தலங்கள் அமைந்துள்ள பகுதியிலும் புதிதாக மதுபான விற்பனை நிலையம் திறக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுவதால் மாணவர்கள், இளைஞர்கள் நலன்கருதி இவற்றை உடன் தடை செய்ய வேண்டும் என்று கருத்துகள் தெரிவிக்கப்பட்டன.
இந்த நிகழ்வில் மன்னார் மதத் தலைவர்கள், அரசியற்பிரமுகர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டார்கள். (எ-213)



## நேபாள முன்னாள் பிரதமர் இலங்கையில்

கொழும்பு, ஜூலை 6
நேபாளத்தின் முன்னாள் பிரதமர் மாதவ் குமார் மாநாடு ஒன்றில் பங்கேற்க இலங்கைக்கு வந்துள்ளார்.
இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி நிறுவப்பட்டதன் 80 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட மாநாட்டில் பங்கேற்க அவர் வந்துள்ளதாக நேபாள ஊடகமொன்று தெரிவித்துள்ளது.
அவர் தெற்காசிய கம்யூனிஸ்ட் கட்சிகள் மற்றும் இடதுசாரிக் கட்சிகளின் கூட்டத்தில் கலந்துகொள்வார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-ரி2)

## கதிர்காமம் சென்ற ஜனாதிபதி ரணில்!

கொழும்பு, ஜூலை 6
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் வரலாற்றுச் சிறப்புமிக்க கதிர்காமம் புண்ணிய தலத்துக்குச் சென்று சமய வழிபாடுகளில் ஈடுபட்டார்.
கிரிவெஹெர விகாராதிபதி வண. கொபவக்க தம்மிந்த நாயக்க தேரரைச் சந்தித்த ஜனாதிபதி, அவரது நலம் விசாரித்தன் பின்னர் உரையாடலிலும் ஈடுபட்டார். பின்னர் ஜனாதிபதி சமய நிகழ்வுகளில் கலந்துகொண்டு ஆசிர்வாதங்களைப் பெற்றுக்கொண்டார்.
கதிர்காமம் வருடாந்த எசல மகா பெரஹரா வின் இறுதி நாளான நேற்று பெரஹராவை ஆரம்பித்து வைத்து ஜனாதிபதி, கந்துல ஹஸ்தி ராஜாவின் மீது தாது கலசத்தை ஸ்தாபித்தார். (எ-இ)





# வெதுப்பக உற்பத்திகள் விலை குறைக்கப்படா!

### உரிமையாளர்கள் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 6
மின்சாரக் கட்டணத்தில் திருத்தம் மேற்கொள்ளப்படினும் வெதுப்பக உற்பத்திகளின் விலையைக் குறைக்க முடியாது என வெதுப்பக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.
சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்த்தன ஆங்கில ஊடகமொன்றுக்கு இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் கூறியதாவது:-
முன்பதாக மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட்ட நிலையில் வெதுப்பக உற்பத்திகளின் விலைகள் அதிகரிக்கப்படவில்லை.
அந்தவகையில், மின்சாரக் கட்டணங்கள் குறைக்கப்படினும் வெதுப்பக உற்பத்திகளின் விலையில் மாற்றம் செய்ய வேண்டிய தேவையில்லை- என்றார். (ச-ரி2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தொடுதிரையில் இருந்து தொலைவாவோம்

ஒரு நாளைக்கு ஆயிரம் பதிவுகளை மட்டுமே பார்க்க முடியும் என்று புதிய கட்டுப்பாட்டை விதித்திருக்கின்றார் ருவிற்றர் நிறுவனத்தின் உரிமையாளரும் உலகின் முதல் நிலை செல்வந்தருமான எலான் மஸ்க். தொடுதிறன் அலை பேசிகளின் மீதுள்ள ஆழ்ந்த மயக்கத்திலிருந்து மக்கள் விழித்தெழுந்து, தங்களின் நண்பர்களையும் குடும்பத்தினரையும் சந்திப்பதற்காகவும், அவர்களுடன் கருத்துகளைப் பகிர்ந்து கொள்வதற்காகவுமே இந்தக் கட்டுப்பாடு என்றும் அவர் தெரிவித்திருக்கின்றார். நவீன உலகில் மாணவர்களும் பொதுமக்களும் திறன் அலைபேசிகளுடனும், தொடுதிரைகளுடனும் தங்களின் வாழ்க்கையைத் தொலைத்துக் கொண்டிருக்கின்ற நிலையில், எலான் மஸ்க்கின் இந்த அறிவிப்பு நிச்சயம் வரவேற்கப்பட வேண்டியதே. இதில் விவாதிப்பதற்கோ அல்லது வர்த்தகச் சாயம் பூசிவிடுவதற்கோ ஒன்றுமில்லை. அதேநேரம் இந்த அறிவிப்பின் காரணத்தையும் அதன் தாற்பரியத்தையும் சிரத்தையில் ஏற்றி சிந்திப்பதற்குப் பலநூறு விடயங்கள் இருக்கவே செய்கின்றன.

இன்றைய உலகில் திறன் அலைபேசிகளும், தொடுதிரைகளும், சமூக வலைத்தளங்களும் ஆக்கிரமிக்காத இடங்களே இல்லை. இதனால், அவற்றை அணுகுவதும் பழக்கப்படுவதும், காலப்போக்கில் அவற்றுக்கு அடிமையாகி விடுவதும் மிகச்சாதாரண சம்பவங்களாக இன்று மாறிவிட்டன. இதனால் நன்மைகள் இல்லாமலில்லை. வர்த்தகம், கல்வி, தொடர்பாடல் போன்ற துறைகளில் சமூகவலைத்தளங்களும் இன்று தவிர்க்கப்பட முடியாத சக்திகள். ஆனால், எவ்வளவுக்கெவ்வளவு மனித குலம் தொடுதிரையை நெருங்கி நெருங்கி செல்கின்றதோ அவ்வளவுக்கவ்வளவு 'மீண்டும் இணைக்கப்பட முடியாத' இடைவெளி எமக்குள் வேர்விட்டு வளர்ந்துள்ளது. குடும்ப உறவுகள் இன்று ஆரோக்கியமானநிலையில் இல்லை. பிள்ளைகளின் கற்றலுக்கு தொடுதிரைகள் உதவுவதை விடவும் கலாசாரச் சீரழிவையே அவை அதிகம் ஏற்படுத்துகின்றன. போதைப் பொருளுக்கு அடிமையாகும் பாடசாலைச் சிறுவர்களின் வாழ்வைச் சிதைப்பதில் எங்கோ ஓரிடத்தில் தொடுதிரை தொடர்புற்றிருக்கின்றது. இவ்வாறானதொரு பின்னணியில், உலக வர்த்தகத்தின் பெரும் புள்ளியான மஸ்க், தன் சொந்த நிறுவனமான 'ருவிற்றரைப்' பாதிக்கக்கூடிய ஒரு முடிவை மனித குலத்தின் நன்மைக்காக எடுத்து அதை நடைமுறைப்படுத்தியிருக்கின்றார் என்றால், அதிலிருந்தே நாங்கள் இந்தத் திறன் அலைபேசிகளின் தாக்கத்தையும் ஆபத்தையும் உணர்ந்துகொள்ளவேண்டும்.

அன்றைய காலத்தில் இருந்த கற்றல் கற்பித்தல் முறைகள் இன்றில்லை. இன்றைய உலகம் இலத்திரனியல் கற்கையை முன்னிலைப்படுத்தியது. ஆதலால், இன்று தொடுதிரைகளும் திறன் அலைபேசிகளும் தவிர்க்க முடியாதவை என்று இந்த 'நவீனத்துவப் பிறழ்வுக்கு' நாம் காரணம் சொல்லலாம். ஆனால் அவ்வாறாக நாம் அடுக்கும் காரணங்கள் எம்மை நாமே ஏமாற்றும் செயலே அன்றி வேறில்லை. மாணவர்களிடம் இன்று திறன் அலைபேசிகள் இருக்கவேண்டும்தான். ஆனால், அவற்றின் மீதான கண்காணிப்பை பெற்றோரும், பாதுகாவலர்களும் இறுக்கமாகக் கொண்டிருக்க வேண்டும். இவ்வாறானதொரு பின்புலத்தில் தனியார் கல்வி நிறுவனங்கள் தங்களின் கற்றல் செயற்பாடுகளை வெள்ளி மற்றும் ஞாயிறு தினங்களில் முன்னெடு[illegible] கூடாது. அந்த நேரத்தை மாணவர்கள் தங்களின் [illegible] உறவுகளுட[illegible] செல விட [illegible] ண்டும [illegible] ற யாழ்ப்பாணம், கிளி நொச்சி [illegible] யலக[illegible] ளின் முடிவுகள் வரவேற் [illegible] வையே. இந்த முடிவு வெறுமனே [illegible] நொச்சி மாவட்டங்[illegible] [illegible] ட்டுமொத்த இலங்கை[illegible] [illegible] ண்டும். மாண[illegible] [illegible] சுமைமிக்க கற்றல் செ[illegible] இருந் [illegible] பதற்கு முடியுமான அ[illegible] நடவடிக்கை[illegible] ளையும் அரசாங்கம் [illegible] ள்கை[illegible] மேற்கொள்ள வேண்டும்.

மாணவர்களும் இளைஞர்களும் குடும்ப உறவுகளுடன் நேரத்தைச் செலவிட வேண்டியதன் அவசியத்தை – மேற்கத்தேய தேசங்களே உணர்ந்துவரும் இக்காலத்தில், குடும்ப உறவுகளுடன் பின்னிப்பிணைந்த வாழ்க்கை முறையைக் கலாசாரத்தைக் கொண்ட நாம், அதிலிருந்து விலகி வெளியேறிச் செல்வதானது எவ்வளவு பெரிய அபத்தம்.

### நாளொரு நல்வார்த்தை


"கோபம் என்னும் அமிலம் எறியப்படும் இடத்தை விட அதை வைத்துக் கொண்டிருக்கும் கிண்ணத்தையே பெரிதும் நாசப்படுத்தி விடும்"

— கிளெண்டல்




# புதுச்சேரி - யாழ். - திருமலை கப்பல் வழித்தடம் ஆரம்பிக்குக

## செந்தில் தொண்டமான் கோரிக்கை



யாழ்ப்பாணம், ஜூலை 6

**யாழ்ப்பாணம் - காரைக்கால் இடையிலான கப்பல் சேவைக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளதால், அதன் வழித்தடத்தை மாற்றி புதுச்சேரி - யாழ்ப்பாணம் - திருகோணமலை என்றவாறாக அதனை ஆரம்பிக்க வேண்டும் என்று கிழக்கு மாகாண ஆளுநரான செந்தில் தொண்டமான் புதுவை முதல்வர் ரங்கசாமியிடம் வலியுறுத்தியுள்ளார்.**

காரைக்காலில் இருந்து காங்கேசன்துறை வரையிலான கப்பல் சேவை முயற்சிகளுக்கு நடைமுறைச் சிக்கல் ஏற்பட்டுள்ளது. அதனால் அந்த வழித்தடத்தை மாற்றி புதுச்சேரி காங்கேசன்துறை மற்றும் திருகோணமலைக்கு கப்பல் சேவையை தொடங்க நடவடிக்கை எடுத்தால் சுற்றுலா மற்றும் வணிகத் தொடர்பு மேம்படும் என்று கிழக்கின் ஆளுநர் செந்தில் தொண்டமான் மேலும் வலியுறுத்தியுள்ளார். (ம-இ)



# யாழ். பல்கலையில் கரும்புலி நினைவு!

யாழ்ப்பாணம், ஜூலை 6

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கரும்புலிகள் நாள் நினைவேந்தல் நேற்று மதியம் உணர்வுபூர்வமாகக் கடைப்பிடிக்கப்பட்டது. யாழ்.பல்கலைக்கழகத்தின் பிரதான வளாகத்தில் கரும்புலிகளின் நினைவுப்படத்துக்கு, மாணவர்களால் ஈகைச்சுடரேற்றி மலரஞ்சலி [illegible] வணக்கமும் செலுத்தப்பட்டது. (ம)

# ரணிலின் அழைப்பை ஐ.ம.ச. நிராகரிப்பு!


அரசுடன் இணைந்து செயற்படுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் விடுத்த அழைப்பை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி நேற்று நிராகரித்துள்ளது. நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத்தேர்தல் நடத்தப்படுமானால், அதன்பின்னர் ஜனாதிபதியுடன் இணைந்து செயற்படலாம் எனவும், அவ்வாறு இல்லாவிட்டால் இணைந்து செயற்படத் தயாரில்லை எனவும் ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்த நாயக்க தெரிவித்தார். ஊழல்வாதிகள் உள்ள தற்போதைய அரசைப் பாதுகாப்பதற்குத் தமது அணி தயாரில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (ம)

07.07.2023
வெள்ளிக்கிழமை
ஆனி 22

சுபநேரம் : 05.58 - 07.28
ராகுகாலம் : 10.28 - 11.58

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம்
11 . 11 . 1951

மறைவு
03 . 07 . 2023

## திரு. சபாபதி கிருஷ்ணபிள்ளை

**(இளைப்பாறிய முன்னாள் நீர்ப்பாசன உத்தியோகத்தர் – வவுனிக்குளம்)**

அம்பன், குடத்தனையைப் பிறப்பிடமாகவும், புகையிரத வீதி, கொடிகாமத்தினை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சபாபதி கிருஷ்ணபிள்ளை கடந்த (03.07.2023) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி சபாபதி தெய்வானை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற திரு.திருமதி சரவணமுத்து தெய்வானை தம்பதிகளின் மருமகனும், திருமதி கிருஷ்ணபிள்ளை கமலாதேவியின் அன்புக் கணவரும், திருமதி சின்னத்தங்கம், அன்னக்கிளி, திரு. துரைராஜசிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் தாமோதரம்பிள்ளை, காலஞ்சென்ற அன்னப்பிள்ளை மற்றும் சின்னம்மா, சிவயோகம், காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம், கார்த்திகேசு ஆகியோரின் மைத்துனரும், கிருஷ்ணானந்தி (ஆனந்தி - பிரான்ஸ்), விமல்ராஜ் (விமல் - பிரான்ஸ்), காலஞ்சென்ற கமலதாஸ் ஆகியோரின் பாசமிகு தந்தையும், திரு. விநாயகமூர்த்தி (பிரான்ஸ்), கலாரஜனி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், பானுஜன் (பிரான்ஸ்), கமீஷ்கன் (பிரான்ஸ்), நிதுஷ்கன் (பிரான்ஸ்), சர்சிகா (பிரான்ஸ்), டினுஷ்கன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.07.2023) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் கோகிலாமனை கட்டமுறிச்சான் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**

**கி.விமல்ராஜ் (மகன் - பிரான்ஸ்)**

(CS/51137)AH-1

ஆனந்தி : 0033 6162 58278, விமல் : 0033 6166 46900,

மனைவி : 077 018 5226

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அன்னையின் மடியில்
19.11.1937

ஆண்டவன் அடியில்
06.06.2023

## அமரர் குமாரவேலு விசயரத்தினம்
## (ரட்ணம் பாமசி & Ratnam Filling Station)

குடும்பத்தின் குலவிளக்கே - எங்கள்
விழி நிகர்ந்த பேருறவே
அன்பின் திருவுருவே - எம்மை
அணைத்துக் காத்த பெருமகனே
வழியேதும் தெரியாமல் - நாம்
விழிமூடி அழுகின்றோம்
உம் நினைவோடு நாம் வாழ்வோம்
நீடு துயில் செய்திடுக நிர்மலன் அடியில்

**ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!**

அன்னாரின் மரணச் செய்தி கேட்டு நாம் துயருற்று இருந்த வேளையில் நேரில் வந்தும் தொலைபேசியூடாகவும், முகநூல், மின்னஞ்சல், RIP Book ஆகியவை மூலமாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மலர்வளையங்கள், மலர்மாலைகள் சாத்தியவர்களுக்கும், உற்றார், உறவினர், நண்பர்கள் எமது இல்லத்திற்கு நேரடியாக வந்து தங்கள் அனுதாபங்களைப் பகிர்ந்து சென்ற சிவாச்சாரியப் பெருமக்கள் மற்றும் இன்றுவரை எமக்கு சகல உதவிகளையும் செய்த அன்பு நெஞ்சங்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் 31 ஆம் நாள் நினைவஞ்சலி இன்று (06.07.2023) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற்று அதனைத்தொடர்ந்து அவரின் நினைவாக மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

144/1, இராசாவின் தோட்டம் வீதி,
யாழ்ப்பாணம்.
077 306 9506
021 222 7326

குடும்பத்தினர்

(cs.511115) (N-1)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மாணவர்களின் எதிர்காலம் கருதி ஒத்துழைப்பு வழங்கியமைக்கு நன்றி

## யாழ்.மாவட்டச் செயலர் வரவேற்பு



மாணவர்களின் சிறந்த எதிர்காலத்துக்கென கொண்டுவரப்பட்ட வெள்ளி, ஞாயிறு தினங்களில் தனியார் வகுப்புகளில் கற்றல் செயற்பாட்டை தடைசெய்யும் நடைமுறையை பின்பற்றிய அனைவருக்கும் நன்றியைக் கூறிக்கொள்கிறேன் என யாழ்.மாவட்டச் செயலர் ஆ.சிவபால சுந்தரம் தெரிவித்துள்ளார்.
தனியார் கல்வி நிறுவனம், பிரத்தியேக கல்வி வகுப்புக்கள் வாரத்தில் ஏழு நாள்களும் கல்விச் செயற்பாட்டில் ஈடுபடுவதனால் பிள்ளைகள் சமூகத்தில் சாதக, பாதக நிலைமைகளை எதிர்நோக்க நேரிடுகிறது.
அதனால் பிள்ளைகளுக்கு ஏற்படும் மன அழுத்தங்களைக் குறைப்பதற்கும் பெற்றோருடன் பிள்ளைகளுக்கான பிணைப்பை ஏற்படுத்தி அதிக நேரத்தை செலவிடவும் தனியார் வகுப்புக்கள் வெள்ளி, ஞாயிறு தினங்களில் நடைபெறுவதை நிறுத்தும் தீர்மானத்தை கொண்டுவந்தேன்.
இந்தத் தீர்மானத்தை ஏற்று நடைமுறைப்படுத்தி ஒத்துழைப்பு நல்கிய அனைத்து தனியார் கல்வி நிறுவன நிர்வாகம், பிரத்தியேக வகுப்புக்களை நடத்துபவர்கள், பெற்றோர் என அனைவருக்கும் நன்றியைத் தெரிவிக்கின்றேன்.
இந்த நடைமுறையைத் தொடர்ந்தும் பின்பற்றி அனைத்து தரப்பினரும் மாணவர்களின் சிறந்த எதிர்காலத்துக்கு பாலமாக அமைய வேண்டும் - என்றார்.

(ச-ரி3-27,125)

**யாழ்ப்பாணம் நவாலியூர், களையோடையம்பதி திருவருள்மிகு நாகலிங்கேஸ்வரர் தேவஸ்தான புனராவர்த்தன பிரதிஸ்டா**

**மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்-2023**

**கிரியை ஆரம்பம்**
**05.07.2023 புதன்கிழமை**
**காலை 7.00 மணிக்கு நடைபெறும்**

**எண்ணெய்க்காப்பு**
**06.07.2023 வியாழக்கிழமை**
**காலை 7.00 மணிக்கு நடைபெறும்**

**மஹா கும்பாபிஷேகம்**
**07.07.2023 வெள்ளிக்கிழமை**
**காலை 8.50 மணிக்கு நடைபெறும்**

அனைவரும் வருகை தந்து எம்பெருமானின் திருவருளைப் பெற்றுய்வீர்களாக.

**அறங்காவலரும், சபையினரும்.**

# கேள்வி அறிவித்தல்

## சாவகச்சேரி பிரதேசசபை.
## குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை (PSDG) - 2023

01. தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, சாவகச்சேரி பிரதேசசபை அவர்கள் தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோருகின்றார்.
02. விலைக் கேள்வியானது தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
03. ஒப்பந்ததாரர்கள் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் (CIDA) வீதி/கட்டடம் நிர்மாணத்திற்கு கீழ்க்குறிப்பிடப்படும் தரத்தினைக் கொண்டிருப்பதோடு, இவ் விலைமனுக் கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளை கொண்டுள்ளதும், கறுப்புப் பட்டியலில் (Black list) சேர்த்துக்கொள்ளப்படாததுமான கேள்விதாரருக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
04. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule -5) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
05. கேள்விகள் சமர்ப்பிக்கும் போது பெறுமதி சேர் வரி (VAT) வலுவிலுள்ள சான்றிதழ் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அவ்வாறான ஆவணங்கள் உள்ளடங்கிய கேள்விதாரருக்கு மாத்திரமே வரிக் கொடுப்பனவைக் கோரமுடியும்.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் செயலாளர் சாவகச்சேரி பிரதேசசபை, A9 வீதி, கொடிகாமம் (தொலைபேசி : 021-2050348, 0212050356 தொலைநகல் : 021-2050348) எனும் முகவரியில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய அலுவலகத்தில் 2023.07.06 தொடக்கம் 2023.07.19 வரையான காலப்பகுதியில் அலுவலக நாட்களில் மு.ப 09.00 மணி முதல் 16.00 மணிவரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கில மொழியிலான கேள்வி ஆவணங்களின் 'ரணமான தொகுதி ஒன்றை தலைவர், பெறுகைக்குழு, சாவகச்சேரி பிரதேசசபை, A9 வீதி, கொடிகாமம் எனும் முகவரியில் 2023.07.06 ஆம் திகதியிலிருந்து 2023.07.19 ஆம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் மாலை 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கமுடியாத கட்டணமாக ஒவ்வொரு கேள்வி ஆவணத்திற்கும் ரூபா. 2,000.00 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத் தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
08. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வியை இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதி, நகல்பிரதி என தனித்தனி உறைகளிட்டு தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, சாவகசேரி பிரதேசசபை, A9 வீதி, கொடிகாமம் எனும் முகவரிக்கு 2023.07.19 ஆம் திகதி மாலை 14.30 மணிக்கு முன்பதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
09. கீழ் காட்டப்படும் கேள்விகள், கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து அனைத்து வேலைகளுக்கு 63 நாட்கள் (2023.09.20) வரையும் செல்லுபடியாகும்.
10. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழ்வரும் அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.
11. கேள்விகள் தொடர்பான முன்னோடிக் கலந்துரையாடல் 2023.07.14 ஆம் திகதி மாலை 15.00 மணிக்கு பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் அனைவரும் இக்கலந்துரையாடலில் தமது சொந்த செலவில் கலந்து கொள்ள முடியும்.
12. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை நிராகரிக்கவோ அல்லது மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழுத் தலைவருக்கு அதிகாரம் உண்டு.

| இல | [illegible] | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (வரி நீங்கலாக (Mn) | ஒப்பந்த காலம் (நாட்கள்) | வேண்டப்படும் தரம் | கேள்விப் பிணை வைப்பு (ரூபா) | கேள்விப் பிணை செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | [illegible] | Construction of Culvert and Retaining Wall in Neniyan Road at Madduvil Centre | 2,608 | 87 | C9, C8 & C7 | 27,900.00 | 2023.10.17 |

**தலைவர்,**
**உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு,**
**சாவகச்சேரி பிரதேசசபை.**
**2023.07.05**

(cr 39908) (N-1)

# ஒரே குற்றத்துக்காக இருமுறை கைது!

மதுபோதையில் சாரத்தியம் செய்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டு தண்டம் விதிக்கப்பட்ட நபரொருவர், அதேதினத்தில் மீளவும் மதுபோதையில் வாகனத்தைச் செலுத்திய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
கடந்த வாரம் மானிப்பாய் நகர்ப் பகுதியில் மதுபோதையில் சாரத்தியம் மேற்கொண்ட குற்றச்சாட்டில் 28 வயதுடைய இளைஞரை பொலிஸார் கைதுசெய்து நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நீதிமன்றில் முற்படுத்தினர். சந்தேகநபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து 25 ஆயிரம் ரூபா தண்டமும் 3 மாத சாரதி அனுமதிப்பத்திரத்தடையும் நீதிமன்றால் விதிக்கப்பட்டது. அன்றையதினம் குறித்தநபர் மோட்டார் சைக்கிளை பொலிஸ் நிலையத்திலிருந்து மீட்டுச் சென்ற நிலையில், வீதிச்சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட போக்குவரத்துப் பொலிஸார் மானிப்பாய் பகுதியில் அவரை மறித்து சோதனையிட்டனர். இதன்போது மதுபோதையில் மீளவும் அவர் சாரத்தியம் செய்தமை கண்டறியப்பட்டது. சந்தேகநபரை மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

(ச-125)

**ஊர்காவற்றுறை**
**பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ - து)**

**ஒப்பந்த அடிப்படை**

**1) எரிபொருள் நிலைய முகாமையாளர்**
மேற்படி பதவிக்கு தகைமையுடையோர்.
அலுவலக நேரத்தில் எம்முடன்
தொடர்புகொண்டு விபரங்களைப் பெற்று
(13.07.2023) ஆந் திகதிக்கு முன்னர்
விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கவும்.

**பொதுமுகாமையாளர்**
தொ.பேசி.இல. **021 221 1648**

(cs 25457) (N-1)

## பெயர் மாற்றம்

காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணத்தில் வசிக்கும்
**சித்திராதேவி** ஆகிய நான் எனது பெயரை
**சித்திரா** என மாற்றம் செய்வதோடு
சகல ஆவணங்களிலும் சித்
கையொப்பமிடுவேன் என இ ரசு
மக்களுக்கு அறியத்தரு

(cs.25463) (N.1)

## பெயர்மாற்

புலோப்பளை மேற்கு பளையி
**பொன்னையா கோணேஸ்வரி** ஆ
பெயரை **பொன்னையா சிந்துஜா**
செய்வதோடு இனிவரும் சகல ஆவண
**பொன்னையா சிந்துஜா** என்றே கை
இடுவேன் என இலங்கை சோசலிச குடியரசு மக்களுக்கு
உறுதிப்படுத்துகின்றேன்.

**- பொன்னையா சிந்துஜா -**

(CS/51118)AH-1

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





# வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் வைரவர் சாந்தி

## உற்சவம் - 06.07.2023

மேற்படி வைரவர் சாந்தி உற்சவம்
**இன்று (06,07.2023) வியாழக்கிழமை பிற்பகல் 5.00 மணிக்கு**
**விஷேட அபிஷேகம்** நடைபெற்று **பிற்பகல் 5.30 மணியளவில்**
**வசந்த மண்டப பூசை ஆரம்பமாகி தொடர்ந்து வைரவர் பெருமான் வீதி உலா வருவார்**
வீதி வலம் வந்த பின்னர் அடியவர்களுக்கான பிரசாதம் வழங்கப்படும்
அதனைத் தொடர்ந்து ஏற்கனவே தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்கள் மற்றும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்களுக்கு கல்வி மேம்பாட்டு நலத்திட்டங்கள் வழங்கும் நிகழ்வு நடைபெறும்.

### விசேட இசை நிகழ்ச்சி

சாவகச்சேரியை சேர்ந்த காலஞ்சென்ற நாதஸ்வர மேதை கலாநிதி பஞ்சாபி கேசன் அவர்களின் பேரப்பிள்ளைகளான
**நாதஸ்வர வித்துவான்கள் - விக்னேஸ்வரன் சித்தார்த்தன், விக்னேஸ்வரன் பிரபித்தன்**
இணைந்து வழங்கும் **நாதசங்கமம்** அணிசேர் இசைக்கலைஞர்கள்

| தவில் | தபேலா | Octopad | Bass | ஓகன் |
|---|---|---|---|---|
| பிரியங்கன் | கபிலன் | கிரிதரன் | ஹென்றி | சானு |

ஒலி - குமணன் சவுண்ட்
ஒளி - சுரேஸ் ஒளி அமைப்பினர்

**வைரவர் சாந்தி உபயகாரர்**
**வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம் தொண்டர் சபையினர்.**

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி





கடந்த (21.06.2019) வெள்ளிக்கிழமை அன்று
சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

## அமரர் செல்லையா சிவலிங்கம்

**திதி : சதுர்த்தி (06.07.2023)**

அவர்களின் நான்காம் ஆண்டு நிகழ்வு இன்று (06.07.2023) வியாழக்கிழமை அவரது நினைவாக அஞ்சலி செலுத்துகின்றோம்.

இல.55, அம்பலவாணர் வீதி,
அத்தியடி, யாழ்ப்பாணம்

**குடும்பத்தினர்**
**077 376 8952**

தோற்றம் 01.10.1951
மறைவு 21.06.2019

**மைதிலி நகை மாடம் (PVT) Ltd.**
**யாழ்ப்பாணம்.**

(cr.37202) (N.1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி காயத்திரி சாரங்கன்

# எங்கும் பிளாஸ்ரிக்: கொல்லும் பிளாஸ்ரிக்!

11.06.2023 உதயன் - சஞ்சீவியில் வெளியான கட்டுரையின் இறுதிப் பகுதி இது.



பிளாஸ்ரிக் உறைகளால் அடைக்கப்பட்ட பதப்படுத்தப்பட்ட, உணவுப்பொருட்களால் உடலுக்கு பல கேடுகள் விளைகின்றன. பிளாஸ்ரிக் பைகளால், கழிவு நீரில் தேக்கம் ஏற்பட்டு புதிய நோய்கள் பரவுவதோ தோடு , சுகாதாரக்கேடும் உருவாகும். குறிப்பாக டெங்கு முதலான ஆபத்தான நோய்கள் பரவுவதற்கு வாய்ப்பு அதிகரிக்கின்றது.

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த வியன்னா மருத்துவப் பல்கலைக்கழகம் 2018ஆம் ஆண்டு நடத்திய ஆய்வில் மனித உடலில் பிளாஸ்ரிக் கலந்திருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. ஐரோப்பாவைச் சேர்ந்த பல நாடுகளில் இருந்தும் மூன்று ஆண்கள் ஐந்து பெண்கள் என எட்டு பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு சோதனை செய்துள்ளனர். ஒரு வாரமாக எட்டுப்பேருடைய உணவுகளும் குறிப்பெடுக்கப்பட்டுள்ளன. குறிப்பாகக் கடல் உணவுகள் மற்றும் பிளாஸ்ரிக் பையில் இருக்கிற உணவுகள், பிளாஸ்ரிக் போத்தலில் உள்ள தண்ணீரைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். ஒவ்வொரு நாளும் எட்டு பேருடைய மனிதக் கழிவுகளும் சேமிக்கப்பட்டு பரிசோதனை செய்யப்பட்டன. ஆய்வின் இறுதியில் மனிதக் கழிவுகளில் மைக்ரோ அளவுக்கான பிளாஸ்ரிக்குகள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. அதாவது இங்கு குறிப்பிடும் மைக்ரோ பிளாஸ்ரிக் என்பது மனித முடியின் அடர்த்தியை விட பத்து மடங்கு சிறியது.

எமது நாடான இலங்கையிலும் இதன் பாவனை குறைந்தபாடில்லை என்றே சொல்லலாம். ஒவ்வொரு ஆண்டும் இலங்கையில் இருந்து இந்து சமுத்திரத்துக்குள் 6,40,000 மெற்றிக்தொன் பிளாஸ்ரிக் கழிவுகள் கலக்கின்றன (2020). மேல்மாகாணத்தில் மாத்திரம் 7,500 மெற்றிக்தொன் குப்பைகள் சேர்கின்றன. அவற்றில் 3,500 மெற்றிக்தொன் குப்பைகளே முறையாகச் சேகரிக்கப்படுகின்றன (Central Envirnomental Authority 2018). வடமாகாணத்தில் இன்னும் மோசமான நிலையே நிலவுகின்றது. ஜூன் 05 சுற்றாடல் தினத்தன்று என்னதான் விழிப்புணர்வு பற்றி பேசிக் கொண்டிருந்தாலும் எமது மக்கள் இது தொடர்பில் விழித்துக் கொள்வதாயில்லை. ஐக்கிய நாடுகள் சபை 2023 ஆம் ஆண்டின் சுற்றுச்சுழல் தினக் கவனக்குவிப்பாகப் "பிளாஸ்ரிக் மாசைத் தோற்கடிப்போம்" என்று கூறியிருந்த நிலையில் கூட அண்மையில் நடைபெற்ற வற்றாப்பளை கண்ணகி அம்மன் திருவிழாவில் "இந்தளவுக்கா ஒரு சூழல் மக்களால் மாசாக்கப்படுமா???" அதுவும் குறிப்பாக பிளாஸ்ரிக் கழிவுகளால் என்று சமூக ஊடகங்களில் பதிவு செய்யப்பட்டிருப்பது எமது மக்களின் ஒரு மதிப்பற்ற நிலையை எடுத்தியம்புகின்றது.

இருந்தும் இலங்கை அரசாங்கம் பிளாஸ்ரிக், பொலித்தீன் பாவனையைக் குறைக்க பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. 2021 மார்ச் 31 முதல் பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் வகைகள் சிலவற்றின் பாவனையைத் தடை செய்ய சுற்றாடல் அமைச்சால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன்படி ஒருமுறை மாத்திரம் பயன்படுத்திவிட்டு அகற்றப்படுகின்ற பொலித்தீன், பிளாஸ்ரிக் போத்தல், மைக்ரோ இருபதுக்கும் குறைவான பொலித்தீன், சம்போ பைக்கெற் மற்றும் காற்று நிரப்பப்பட்ட பிளாஸ்ரிக் விளையாட்டுப் பொருட்கள் என்பன இதனுள் அடங்கும்.

எனவே இவ்வாறான பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் உற்பத்திகள் சிலவற்றை மார்ச் 31 முதல் இலங்கையில் உற்பத்தி செய்ய மற்றும் விநியோகிக்கத் தடை செய்யவேண்டும் எனக் குறிப்பிட்டிருந்தது. இதில் இலங்கையின் பல முதல் தர ஹோட்டல்களில் பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் பாவனைக்குப் பதிலான மாற்று பொருட்கள் பயன்படுத்தப்படுவது குறித்தும் பேசப்பட்டது. மேலும் 350 உற்பத்திப் பொருட்களைப் பயன்படுத்தத் தடை செய்வதற்கும் நடவடிக்கை எடுத்து வருவதாக சுற்றாடல் அமைச்சு குறிப்பிட்டிருக்கின்றது.

பொலித்தீன் தாள்களும், ஸ்டைரொஃபோம் பெட்டிகளும் பெரும்பாலான உணவகங்களிலும் வீடுகளிலும் உணவைப் பொதி செய்வதற்கு பயன்படுத்தி வந்தனர். மேலும் பிளாஸ்ரிக் பைகள் நாடு முழுவதும் காணப்பட்ட கடைகளிலும், சுப்பர் மார்க்கெட்களிலும் அதிகமாக பயன்படுத்தப்பட்டு வந்தன. இந்நிலையில் இலங்கை அரசால் கொண்டுவரப்பட்ட இந்தப் புதிய சட்டமானது மக்களைப் பெரும் சிக்கலுக்கு உள்ளாக்கியது. அதாவது பிளாஸ்ரிக் பைகளுக்கு பதிலாக மீண்டும் பயன்படுத்தக்கூடிய துணியாலான பைகளை பயன்படுத்துமாறு புதிய சட்டம் தெளிவுபடுத்தியது. இலங்கையில் 20 மைக்ரான் அல்லது அதை விடக் குறைந்த அடர்த்தியைக் கொண்ட பொலித்தீன் பைகள் உற்பத்தி செய்வது தடைசெய்யப்பட்டது. அத்துடன் ஆடைகளைப் பொதியிடுவதற்குப் பயன்படுத்தப்படும் பிளாஸ்ரிக் பைகள், ஒரு தடவை மாத்திரம் உபயோகிக்கக் கூடிய சிறு கரண்டிகள், உணவு பொதியிடப் பயன்படுத்தப்படும் பிளாஸ்ரிக் பெட்டிகள், யோக்கட் உள்ளிட்டவற்றில் காணப்படும் சிறிய கரண்டிகள், குளிர்பானத்துடன் வழங்கப்படும் சிறு குழாய்கள், இடியப்பம் சமைப்பதற்கு உபயோகிக்கப்படும் பிளாஸ்ரிக் தட்டுகள் மற்றும் பிளாஸ்ரிக் மலர்மாலைகள் உள்ளிட்டவையும் தடை செய்யப்படவுள்ளன. அத்துடன் எமது நாட்டில் நாளாந்தம்உணவுப் பொதி செய்யப் பயன்படுத்தப்படும் "லஞ்ச் சீட்" கிட்டத்தட்ட 10மில்லியன் பேரால் பாவிக்கப்படுவதுடன் நாளாந்தம் பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் தொன் 400 - 500 கழிவுப் பொருளாக வெளியேற்றப்படுகின்றது. சுகாதார அமைச்சினால் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பாவனையைக் குறைக்கும் நோக்கில் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதுடன் 31.05.2016 இல் 01-27/2016 எனும் சுற்றறிக்கைக்கு அமைய செயற்படுமாறு வலியுறுத்தப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்க விடயமாக உள்ளது.

தற்போது இலங்கையில் நாளொன்றுக்கு 20 இலட்சம் பொலித்தீன் பைகள் உபயோகிக்கப்படுகின்றன. இவற்றில் சிறிய அளவிலானவற்றை முதற்கட்டமாகவும் பெரிய பைகளை அதன் பின்னரும் தடை செய்யவுள்ளது. இதே வேளை சிறியளவிலான பிளாஸ்ரிக் நீர்ப் போத்தல்களைத் தடை செய்வது தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு தடை செய்யப்படவுள்ள பொருட்களுக்கான மாற்றுத் தயாரிப்புக்களும் இனங்காணப்பட்டுள்ளன. கடதாசியில் தயாரிக்கப்படும் உணவு பொதியிடும் பெட்டிகள், மரப்பலகையில் தயாரிக்கப்படும் சிறு கரண்டிகள் என்பவை மாற்றுத் தயாரிப்புக்களாகப் பயன்படுத்திக்கொள்ள முடியும்.

செப்ரெம்பர் 1, 2017 அன்று இலங்கையில் பிளாஸ்ரிக் கொள்கலன்கள், தட்டுகள், கோப்பைகள் மற்றும் கரண்டிகள் பயன்படுத்தத் தடை விதிக்கப்பட்டது. இலங்கையின் யாழ்ப்பாணம் நீர்வேலியை சேர்ந்த நபர் ஒருவர் தனது பண்ணையில் பிளாஸ்ரிக் கழிவுகளை குறைக்க, வாழை இலைகளைப் பயன்படுத்துவது பற்றி ஆய்வு செய்கின்றார். வாழை இலைகளைப் பயன்படுத்தும் நபர்கள் மூலமாக அவர் ஒரு நாளைக்கு 44 டொலர் வரை சம்பாதிக்க முடியும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

வாழை இலைகள் ஒரு காலத்தில் உரமாக மட்டுமே பயன்படுத்தப்பட்டன. ஆனால் இந்த உள்ளூர் விவசாயிகள் பொதி உறைகளெனப் புதிய பயன்பாட்டின் மூலமாக பயனடைகிறார்கள். அதே யாழ் விவசாயி குறிப்பிட்டுள்ளதாவது "முன்பு நான் வாழைக்குலை மற்றும் வாழைப்பழங்களை விற்பனை செய்தேன். ஆனால் இப்போது, அதிகமான மக்கள் வாழை இலைகளைக் கேட்கிறார்கள்" என்றார். இலைகளிலிருந்து மட்டும் ஒரு நாளைக்கு 5,000 ரூபா ($27.50) முதல் 8,000 ரூபா ($44) வரை சம்பாதிக்க முடியும் என்று இந்த விவசாயி கூறுகிறார். "என்னிடம் 4,000 வாழை மரங்கள் உள்ளன. அவற்றின் எண்ணிக்கையை அதிகரிப்பதே எனது முக்கிய நோக்கம்" எனவும் குறிப்பிட்டிருந்தார். வாழை விவசாயியான இவர் யாழ்ப்பாணத்தின் நீர்வேலி என்ற இடத்தில் தனது நிலத்தில் பயிர் செய்கிறார். பிளாஸ்ரிக் கழிவுகளை குறைப்பதற்கான ஒரு பரந்த முயற்சியின் ஒரு பகுதியாக, இலைகளை பொதி செய்யப் பயன்படுத்துவதற்கான தேவை அதிகரித்து வருவதால், அவர் தனது 4,000 வாழை மரங்களுக்கு மேலதிகமாக கன்றுகளைச் சேர்க்கிறார். இதன்மூலம் பிளாஸ்ரிக் பொதிகட்டுதலை மாற்றி வாழை இலைகளைக் கொண்டு பொதிகட்டுதலை அதிகரிப்பது என்பது இலங்கையில் காணப்படும் எண்ணற்ற சுற்றுச்சூழல் பிரச்சினைகளை குறைக்க வாய்ப்பளிக்கின்றது. கடலுக்குச் செல்லும் பல நாள் மீன்பிடியாளர்களின் பிளாஸ்ரிக் பாவனை, கடலில் வீசப்படும் பிளாஸ்ரிக் பொருட்கள் குறித்து கவனம் செலுத்தப்படவுள்ளதாக கடல் மாசுறல் அதிகார சபை (MEPA) தெரிவித்துள்ளது. அத்தோடு கடல் பாதுகாப்பு தொடர்பில் கடலை அண்டிய பிரதேசங்களில் இடம்பெறும் பிளாஸ்ரிக் பாவனை தொடர்பிலும் ஆராயவுள்ளதாக சபை சுட்டிக்காட்டியுள்ளது. அந்தவகையில் கடலுக்குச் செல்லும் மீனவர்கள் 500 லீற்றர் முதல் 1000 லீற்றர் வரையான நீரைக் கொண்டு செல்கின்றனர். இந்நிலையில் 5 லீற்றர் போத்தல்களில் நீரைக் கொண்டு செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக கடல் மாசுறல் அதிகார சபை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் வட பிராந்தியத்தில் காணப்படும் பிளாஸ்ரிக் கழிவுகளால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள இரு மீன்பிடிப் கரையோரப் பகுதிகளான குருநகர் மற்றும் பருத்தித்துறை ஆகிய பகுதிகளைத் தூய்மைப்படுத்தும் பணிகளை மேற்கொள்வதற்கான திட்டமொன்று முன்னெடுக்கப்படுகின்றது. இந்தத் திட்டத்தினூடாக சமூக பரம்பல் மற்றும் ஈடுபாட்டை ஏற்படுத்தி, யாழ்ப்பாணப் பிராந்தியத்தை பிளாஸ்ரிக் கழிவுகளிலிருந்து விடுவித்து, இங்கு வசிப்போரின் ஈடுபாட்டுடன் பொருளாதார அபிவிருத்திக்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளது.

ஐக்கிய அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்திக்கான முகவரமைப்பு (USAID) சுத்தமான நகரங்கள், நீல சமுத்திரங்கள் திட்டத்தை கொழும்பு மற்றும் மாலைதீவில் அங்குரார்ப்பணம் செய்துள்ளது. கடலானது பிளாஸ்ரிக் கழிவுகளால் மாசடைதலை மட்டுப்படுத்துவதற்காக 1.2மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான முன்னெடுப்பொன்று அமெரிக்க அரசாங்கத்தின் மாநகர கழிவு மீள்சுழற்சித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது.

சமுத்திரங்களில் காணப்படும் பிளாஸ்ரிக்கை மட்டுப்படுத்தும் இந்த முதன்மை முன்னெடுப்பில் அண்மையில் இணைந்து கொண்ட நாடுகளாக இவை காணப்படுகின்றன. இத் திட்டமானது 48மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியுடைய ஐந்தாண்டு உலகளாவிய முன்னெடுப்பாகும். திண்மக் கழிவு முகாமைத்துவத்தை மேம்படுத்துவதற்கும், நதி மற்றும் கடலோரப் பகுதிகளில் பிளாஸ்ரிக் கழிவுகளை குறைத்தல், மீள்பயன்பாடு, மற்றும் மீள்சுழற்சி (3R)ஆகியவற்றுக்கு இதனூடாக உதவியளிக்கப்படும்.

அதேபோல் எமது அண்டை நாடான இந்தியாவில் ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியும் பிளாஸ்ரிக் பொருட்களான 100 மைக்ரான்களுக்கு குறைவான பிளாஸ்ரிக்-பி.வி.சி. பனர்கள், தட்டுகள், கோப்பைகள், உணவு உண்ண அல்லது பரிமாறப் பயன்படும் பொருட்கள், பிளாஸ்ரிக் குச்சிகள் கொண்ட காது மொட்டுகள், பிளாஸ்ரிக் கொடிகள், மிட்டாய் குச்சிகள், ஐஸ்கிரீம் குச்சிகள் முதலியவற்றை 2022 ஜூலை முதல் பயன்படுத்த தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும் 75 மைக்ரான் தடிமனுக்கு கீழ் உள்ள பிளாஸ்ரிக் கைப்பைகள் மற்றும் 60 கிராம், சதுர மீட்டர் அளவுக்கு கீழ் உள்ள நெய்யப்படாத பிளாஸ்ரிக் கைப்பைகள் 2021 நவம்பர் தொடக்கமும், 120 மைக்ரான் தடிமனுக்கு கீழ் உள்ள பிளாஸ்ரிக் கைப்பைகளை 2022 டிசெம்பர் 31 ஆம் திகதி முதலும் பயன்படுத்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

எனவே தேவையற்ற பிளாஸ்ரிக் பொருட்களை வாங்குவதைத் தவிர்ப்பது எம்முன்னால் உள்ள முதற்தெரிவாகும். இயன்றவரை நீண்டகாலம் பயன்படுத்துவது, கழிக்க முன்னர் இன்னொருமுறை பயன்படுமா என்று சிந்திப்பது, கழிவுகளில் இருந்து பிளாஸ்ரிக்கைப் பிரித்தெடுப்பது போன்ற கழிவு மேலாண்மைகளையும் கையில் எடுக்க வேண்டும். கூடவே, ஒரு நாள் பயன்படுத்தித் தூக்கி வீசும் பிளாஸ்ரிக்குக்கு மாற்றாக கடதாசி, துணி, இலைகள் போன்றவற்றினாலான இயற்கைப் பொருட்களுக்குத் தாமதமின்றித் திரும்பவேண்டும். தவறின் பிளாஸ்ரிக் அதனைப் பிரசவித்த மனுக்குலத்தையே விரைவில் தின்று செரித்து விடும். இதனாலேயே ஐக்கிய நாடுகள் சபை 2023ஆம் ஆண்டின் சுற்றுச்சுழல் தினக் கவனக்குவிப்பாகப் "பிளாஸ்ரிக் மாசைத் தோற்கடிப்போம்" என்ற கருப்பொருளைத் தேர்வு செய்துள்ளது.

முற்றுகையிட்டிருக்கும் பிளாஸ்ரிக் கழிவுகளில் இருந்து இயற்கையையும் எம்மையையும் உடனடியாக மீட்டெடுப்பது இலேசானதொன்றல்ல. எனினும், அதன் தாக்குதல்களின் வீரியத்தைக் குறைக்கவல்ல வியுகங்களையேனும் வகுக்கவேண்டிய கட்டாய நிலைக்கு இன்று நாம் தள்ளப்பட்டுள்ளோம். அத்துடன் அனைத்து வணிகர்களும், பொதுமக்களும் தனக்கென பிளாஸ்ரிக் தவிர்ப்பு முறைகளை வைத்துக் கொண்டு பிளாஸ்ரிக்கை தவிர்க்க முடியும் என்ற நம்முடைய எண்ணம் உருவாக வேண்டும். பிளாஸ்ரிக் இல்லாத நாடாக இலங்கையை உருவாக்குவோம் என ஒவ்வொரு குடிமகனும் உறுதிமொழியை ஏற்படுத்தி கொள்ளுதல் அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பள உயர்வில் இனி கிடுக்குப்பிடி



## அமைச்சர் காஞ்சன அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 6
நிறுவனங்கள் இலாபத்தில் இயங்கினால் மட்டுமே ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு வழங்கப்படும். நட்டத்தில் இயங்கும் எந்த நிறுவனமும் ஊழியர்களுக்கு ஊதிய உயர்வை வழங்காது என்று அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
நஷ்டத்தில் இயங்கும் நிறுவனத்தின் சம்பள உயர்வு, மேலதிக கொடுப்பனவுக் கோரிக்கை என்பவற்றை ஏற்க முடியாது. உலகின் எந்தவொரு நாடும் அவ்வாறு செய்யாது. எனவே அவ்வாறான செயற்பாடுகளை நாம் நிறுத்த வேண்டும். செயற்திறனுடன் பணியாற்றும் ஊழியர்களுக்கு மாத்திரமே சம்பள உயர்வை வழங்க முடியும். ஏப்ரல், டிசெம்பர் மாதங்களில் வழங்கப்படும் மேலதிக (போனஸ்) கொடுப்பனவு நிறுவனம் லாபம் ஈட்டினால் மட்டுமே வழங்கப்படும். அதுவும் செயற்திறன் மிக்க ஊழியர்களுக்கு மாத்திரமே வழங்கப்படும் - என்றார். (ம)

## நாடாளுமன்றின் ஊடாக

# ரணிலின் பதவிக்காலத்தை தக்கவைக்க திட்டமில்லை



கொழும்பு, ஜூலை 6
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பதவிக் காலத்தை நாடாளுமன்றம் ஊடாக நீடித்துக்கொள்வதற்கு எந்தவொரு திட்டமும் இல்லை என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 12 வருடங்களாவது அந்தப் பதவியில் இருக்கவேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டுவருகின்றது. தேர்தல் நடத்துவதற்கு தற்போது நிதியும் இல்லை. எனவே, நாடாளுமன்றத்தில் விசேட சட்டம் ஒன்றை இயற்றியாவது, ஜனாதிபதிக்கு இன்னுமொரு தவணைக்காலம் வழங்கும் திட்டம் உள்ளதா? என ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார். இதற்கு பதிலளிக்கையிலேயே அவ்வாறு எந்தவொரு திட்டமும் இல்லை என அமைச்சரவைப் பேச்சாளர் பதிலளித்தார். (ம-44)

## எரிபொருள் துறை

# 120 நிரப்பு நிலையங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை!

## இருப்பு மறைப்பே காரணம்

கொழும்பு, ஜூலை 6
விலை மாற்றத்தின்போது எரிபொருள் கையிருப்புக்களை உரிய நெறிமுறைகளுக்கு அமைய பேணத் தவறிய 120 நிரப்பு நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எரிபொருளின் சீரான விநியோகத்தை உறுதிப்படுத்தும் வகையில், எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு இருப்பைப் பேணுவது தொடர்பான அறிவுறுத்தல்கள் அண்மையில் வழங்கப்பட்டன. இந்த அறிவுறுத்தல்களைப் பின்பற்றாமல் விட்டால் அந்த எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஏற்கனவே தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையிலேயே எரிபொருள் இருப்புக்காக குறித்தொதுக்கப்பட்ட நெறிமுறைகளைப் பின்பற்றத் தவறிய 120 நிறுவனங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

அண்மையில் எரிபொருளின் விலைகள் அதிகரிக்கப்பட்டன. இதனால், இருப்பை மறைத்துச் சட்டத்துக்குப் புறம்பான இலாபம் ஈட்டும் வகையில் அந்த நிறுவனங்கள் செயற்பட்டமை கண்டறியப்பட்டுள்ளது. (ம)

## எரிபொருள் விநியோகம்

# புதிய நிறுவனங்களின் செயற்பாடு விரைவில்!

கொழும்பு, ஜூலை 6
எரிபொருள் விநியோகத்துக்காக அனுமதி வழங்கப்பட்ட இரு நிறுவனங்களின் செயற்பாடுகள் இம்மாத இறுதிக்குள் ஆரம்பிக்கப்படும் என்று எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
எரிபொருள் விநியோகத்தைப் பரவலாக்க முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் அனைத்துப் பணிகளும் கிட்டத்தட்ட முடிவடைந்துள்ளன. இதன்படி தொடர்ச்சியாக எரிபொருள் விநியோகத்தை முன்னெடுப்பதற்காக இரு நிறுவனங்களுடன் அரசு ஒப்பந்தங்களைச் செய்துள்ளது. அந்த நிறுவனங்கள் இந்தமாத இறுதிக்குள் விநியோகச் செயற்பாடுகளை ஆரம்பிக்க முடியும் என்பதோடு, அவற்றின் முதலாவது எரிபொருள் கப்பல் இம்மாத இறுதியில் இலங்கைக்கு வரவுள்ளது. இந்த நிறுவனங்களுக்கு எரிபொருளை விநியோகிக்கும்போது, ஒரு லீற்றர் எரிபொருளுக்கு 50 ரூபா வரி அறவிடுவதற்கு நிதியமைச்சு தீர்மானித்துள்ளது. அதன் மூலம் இந்தியா, ஈரானிடத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்களை செலுத்தி முடிக்கும் அதேநேரம் விநியோகஸ்தர்களுக்கு வழங்கப்பட வேண்டிய கடன்களையும் விரைவில் செலுத்தி முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது - என்றார். (ம)

# பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நிதியில் வலுவடைந்துள்ளது

கொழும்பு, ஜூலை 6
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நிதி ரீதியில் வலுவடைந்துள்ளது என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
அரசாங்கம் மேற்கொண்ட தொடர்ச்சியான மறுசீரமைப்புக்களின் விளைவாக, தற்போது மின்சாரசபை நிதி ரீதியாக வலுவடைந்துள்ளது. கடந்த 3 வருடங்களாக கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்ட ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகளை மீள ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன், பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கிக்கு செலுத்த வேண்டிய அனைத்து கடன்களையும் செலுத்தியுள்ளது.

ஆனால் அதன் மறுசீரமைப்புச் செயற்பாடுகள் நிறுத்தப்படமாட்டாது. மின்சாரசபையின் மறுசீரமைப்பு தொடர்பான புதிய வரைவு தற்போது சட்ட வல்லுநர்களிடத்தில் கையளிக்கப்பட்டுள்ளது. வரைவு கிடைத்தவுடன் அதனை சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதோடு அமைச்சரவையிலும் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் புதிய சட்டத்தை நிறைவேற்றிக்கொள்ளும் இயலுமை கிட்டும். இதனால் மின்சாரசபை ஊழியர்களுக்கு எந்த நெருக்கடியும் இல்லை. தொழிற் பயிற்சித் தகைமைகளுடன் தற்போது தற்காலிகமாக சேவையில் அமர்த்தப்பட்டுள்ள ஊழியர்களுக்கு நிரந்தர நியமனங்களை வழங்கவும் எதிர்பார்த்துள்ளோம் - என்றார். (ம)

# ஐஸ் போதையுடன் ஒருவர் கைது



மன்னார், ஜூலை 5
மன்னார் தாழ்வுபாட்டைச் சேர்ந்த ஒருவர் ஐஸ் போதைப் பொருளுடன் விசேட அதிரடிப்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். கடந்த திங்கட்கிழமை மன்னார் தாராபுரம் பகுதியில் இந்தக் கைது இடம்பெற்றது.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரிடமிருந்து 20 கிராம் ஐஸ் போதைப் பொருள் மீட்கப்பட்டது.

சட்டநடவடிக்கைக்குட்படுத்த சந்தேகநபர் மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார். (ச-ரி3-213)

# உணவு தவிர்ப்பில் பூஸா சிறைக் கைதி

காலி, ஜூலை 6
பூஸா சிறைச்சாலையில் கைதி ஒருவர் உணவு தவிர்ப்புப்போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.



நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை முதல் சிறைச்சாலை தண்ணீர்த் தாங்கி மீதேறி உணவுதவிர்ப்பில் ஈடுபட்டுள்ளாரென சிறைச்சாலை பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

காலி சிறைச்சாலையிலிருந்து பூஸா சிறைக்கு மாற்றப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே அவர் போராட்டத்தை மேற்கொண்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-ரி3)

# 35 இலட்சம் பயனாளிகளுக்கு கட்டணக்குறைப்பால் நன்மை!

## அமைச்சர் காஞ்சன தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 6
அண்மையில் நடைமுறைப்படுத்தப்பட்ட மின்கட்டணக் குறைப்பால் சுமார் 35 இலட்சம் பயனர்கள் நன்மையடைந்துள்ளனர் என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
பல்வேறு தரப்பினரின் குற்றச்சாட்டுகளுக்கு மத்தியிலும் கடந்த ஜூன் மாதம் மேற்கொள்ளப்பட்ட மின் கட்டணத் திருத்தத்தால் பல லட்சம் பயனர்கள் நன்மையடைந்துள்ளனர். சுமார் 60 லட்சம் மின் பாவனையாளர்களில் 35 லட்சம் பேர் இந்தக் கட்டணக்குறைப்பால் சுமார் 55 வீதமான நிவாரணத்தைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

அத்துடன், மின் கட்டணத் திருத்தத்தின் போது வழிபாட்டுத் தலங்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன், 36 ஆயிரம் பேர் புதிதாக மின்சார இணைப்புக்கள் வழங்கப்பட வேண்டும் என்று கோரியுள்ளனர். அவர்களில் சுமார் 20 ஆயிரம் பேருக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. ஏனையோருக்கு மிக விரைவில் மின் இணைப்பு வழங்கப்படும். அத்துடன், புதுப்பிக்கத்தக்க வலுசக்தித் திட்டங்களை ஆரம்பிப்பதற்குத் தகுந்த சூழல் உருவாகியுள்ளது - என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலகு ரயில் திட்டத்துக்கு அமைச்சரவை அனுமதி!

**கொழும்பு, ஜூலை 6**
**ஜப்பான் அரசாங்கத்தின் நிதியுதவியுடன் இலகு ரயில் திட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்த அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.**

2019ஆம் ஆண்டு மார்ச் மாதம் இந்த இலகு ரயில் திட்ட ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. 2020ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் அதிக பராமரிப்புச் செலவு, சுற்றாடல் மாசு போன்ற காரணங்களைக் காட்டி இந்தத் திட்டம் ஒருதலைப்பட்சமாக அப்போது ஆட்சியில் இருந்த கோத்தாபய ராஜபக்ச அரசாங்கத்தால் இடைநிறுத்தப்பட்டது. சீனாவின் அழுத்தம் காரணமாகவே இந்தத் திட்டம் இடைநிறுத்தப்பட்டது என்று செய்திகள் வெளியாகியிருந்தன.

தற்போது அந்தத் திட்டத்தை மீள நடைமுறைப்படுத்த அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. மலபேயிலிருந்து கொழும்பு கோட்டை வரையான 16 புகையிரத நிலையங்களை உள்ளடக்கியதாக 17 கிலோமீற்றர் நீளமுள்ள மேம்பால ரயில் சேவையாக இது அமையவுள்ளது. 25 புகையிரதங்கள் இந்தச் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன. ஒவ்வொன்றும் 800 பயணிகள் பிரயாணம் செய்யக் கூடிய வசதியைக்கொண்டிருக்கும். ஒவ்வொரு ரயிலிலும் குளிர்சாதன வசதி பொருத்தப்பட்ட பெட்டிகளும் இணைக்கப்பட்டிருக்கும். ஜப்பானிய அரசாங்கம் இந்தத் திட்டத்துக்கென ஆயிரத்து 800 மில்லியன் அமெரிக்க டொலரைக் கடனாக வழங்கியுள்ளது.

(எ-6)



## "புஷ்பக 27" முழுநீளத் திரைப்பட முன்னோட்டம் நேற்று வெளியீடு




யாழ்ப்பாணம், ஜூலை 6
புஷ்பக 27 முழு நீளத் திரைப்படத்தின் குறுந்திரை முன்னோட்டம் நேற்றுப் புதன்கிழமை மாலை கந்தர்மடத்தில் உள்ள நித்திலம் கலையகத்தில் வெளியிடப்பட்டது.

நிகழ்வில் மங்கல விளக்கையாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப் பீட பீடாதிபதி பேராசிரியர் இரகுராம், மருத்துவக் கலாநிதி சிவன் சுதன், ஈழத்தின் மூத்த திரைப்பட நடிகர் இராஜ மகேந்திரசிங்கம், மூத்த ஊடகவியலாளர் இரா. பாரதி, கருவி நிறுவனத் தலைவர் சிவாஜி சேகரம், புஷ்பக27 திரைப்படத் திரைக்கதை எழுத்தாளர் சத்தியா மென்டிஸ், புஷ்பக27 திரைப்பட இயக்குநர் காரை. சிவநேசன் ஆகியோர் ஏற்றினர். தொடர்ந்து அகவணக்கம் செலுத்தப்பட்டது.

திரைப்படத்தின் குறுந்திரை முன்னோட்டத்தை பேராசிரியர் இரகுராம், மருத்துவக் கலாநிதி சிவன்சுதன், திரைப்பட நடிகர் இராஜமகேந்திரசிங்கம் ஆகியோர் இணைந்து வெளியிட்டனர். பேராசிரியர் இரகுராம், மருத்துவக் கலாநிதி சிவன் சுதன், ஊடகவியலாளர் இரா. பாரதி ஆகியோர் சிறு கருத்துரைகளையும் வழங்கினர். நிகழ்வில் இறுதியில் புஷ்பக27 திரைப்பட இயக்குநர் காரை. சிவநேசன் கருத்து வெளியிட்டார்.

நிகழ்வில் மூத்த ஊடகவியலாளர் கணபதி சர்வானந்தா, ஆர்வலர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் புஷ்பக 27 திரைப்பட கலைஞர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

(எ-இ)

# துன்பங்களில் இருந்து விடுபட இறைநம்பிக்கை வளர்ப்போம்

## கொழும்பு மறை மாவட்ட துணை ஆயர் உரை

வறுமை, துன்பம் மற்றும் மனவேதனைகளுடன் உழன்று கொண்டிருக்கும் நாம் இந்தப் பிரச்சினைகளிலிருந்து மீட்சி பெற நம்பிக்கையுடன் பயணிக்க வேண்டும். அதற்கென பாப்பரசர் பிரான்ஸிஸ் 'நம்பிக்கையின் திருப்பயணம்' என்ற சிந்தனையில் இந்த வருட ஜனவரியில் வெளியிட்ட பிரகடனம் தொடர்பில் இலங்கை ஆயர் மன்றம் ஆரம்பப் பணிகளை முன்னெடுத்துள்ளது. இவ்வாறு கொழும்பு மறைமாவட்ட துணை ஆயர் அன்ரன் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

மன்னார் மறை மாவட்ட மருதமடு அன்னையின் ஆடிமாத பெருவிழாவில் பங்கேற்று ஆற்றிய மறையுரையில் இதனை அவர் தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றியதாவது:-

நாம் வாழும் இந்தக் காலம் நம்பிக்கையிழந்து வாழும் காலமாக மாறியுள்ளது. நம்பிக்கைதான் எமது வாழ்க்கையிலும் ஒருவரையொருவர் இணைத்துக் கொள்ளுகின்றது.

அந்தவகையில் உலகின் 4 பக்கங்களிலிருந்து வரும் மக்கள் ஒருவரையொருவர் சந்தித்தல், பணிசெய்தல், சமத்துவம், ஒற்றுமையை மக்கள் மத்தியில் நிலைநாட்டலாம்.

அதற்கென 2025 ஆம் ஆண்டிலே கொண்டாடப்படவுள்ள பெருவிழாவுக்கான தயாரிப்பை திருத்தந்தை பிரான்ஸிஸ் மேற்கொண்டுள்ளார். அதற்கான ஆயத்தங்களை இலங்கை ஆயர் மன்றமும் ஆய்வு செய்து வருகின்றது. அது விரைவில் வெளியிடப்படும் - என்றார்.

(ச-60)

## ஊர்காவற்றுறை - காரைநகர் பாதைச்சேவை திங்கள் முதல்

ஊர்காவற்றுறை - காரைநகர் இடையேயான படகுப் பாதையின் திருத்த வேலைகளை ஒரு வாரத்துக்குள் முடிவுறுத்தி எதிர்வரும் திங்கட்கிழமை முதல் மீள சேவை ஆரம்பிக்கப்படும் என வடமாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் குறூஸ் தெரிவித்துள்ளார்.

படகுப்பாதையின் கேபிள் கம்பிகள் கொழும்பிலிருந்து எடுத்துவரப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பாதையின் ஒரு பக்க கேபிள் முழுமையாக மாற்றப்பட்டுள்ளதுடன் மறுபக்க கேபிள் பொருத்தும் பணிகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இந்தநிலையில் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் படகுப் பாதைச்சேவைமீள ஆரம்பமாகும்என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-125)

# சஜித்தை ஜனாதிபதியாக்க வியூகம் வகுக்கும் ரணில்!

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தனது 'நவீன லிபரல்வாத' கொள்கைகளைப் பின்பற்றும் சஜித் பிரேமதாஸவை, தனக்குப் பின்னர் அடுத்த ஜனாதிபதியாக்கத் திட்டமிட்டிருக்கலாம் என்று பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலர் சாகர காரியவசம் சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் அப்போதிருந்த நிலைமை, தேவைக்கு ஏற்ப கோத்தாபயவுக்கு இருந்த எஞ்சிய பதவிக் காலத்தை ஆட்சி செய்வதற்காகவேரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக நியமித்தோம்.

தேசிய பொருளாதாரத்தினூடாக நாடு கட்டியெழுப்பப்பட வேண்டும் என்பதுடன் கிராமங்களில் இருக்கும் ஏழை மக்களைப் பலப்படுத்துவதினூடாகவே நாட்டின் மொத்த பொருளாதாரத்தையும் கட்டியெழுப்ப முடியும் என்பதே எங்களின் நம்பிக்கையாகும். ஆனால், புதிய லிபரல் பொருளாதாரக் கொள்கையினூடாக நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் என்பதே ஜனாதிபதி ரணிலின் நம்பிக்கையாகும். அந்த நிலைப்பாட்டை தொடர்ந்து எதிர்காலத்துக்கு எடுத்துச் செல்லக்கூடிய தலைவராகவே சஜித் பிரேமதாஸ இருக்கிறார். அதற்கமைய, ஒருவேளை இந்த நாட்டின் ஜனாதிபதி பதவியை எதிர்காலத்தில் சஜித் பிரேமதாஸ வகிக்கவேண்டும் என்று ஜனாதிபதி எண்ணலாம் என கருதுகிறோம் - என்றார்.

(ம)

# விடுதியில் கலாசாரச் சீரழிவுகள் சுற்றிவளைத்து பொலிஸ் கைது!

## வவுனியாவில் சம்பவம்

வவுனியா, ஜூலை 6
வவுனியா, ஏ-9 வீதியில் மூன்றுமுறிப்பில் அமைந்துள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் நேற்றுத் திடீரென மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 20 வயது இளம்பெண் உட்பட நால்வர் வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அந்த விருந்தினர் விடுதியில் சமூகப் பிறழ்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே திடீர் சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அந்த விடுதியில் தங்கியிருந்த 20, 34 வயதுடைய இரு பெண்களும், போதைப் பொருள் பாவித்தமை மற்றும் சமூகப் பிறழ்வு நடவடிக்கைகளுக்கு உடந்தையாக இருந்தனர் என்ற குற்றச்சாட்டில் இரு ஆண்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நால்வரின் மருத்துவ அறிக்கைகள் பெறப்படவுள்ளன என்றும், விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

அதேவேளை, இந்த விருந்தினர் விடுதி முன்னாள் பொலிஸ் உயர் அதிகாரி ஒருவரின் பின்னணியிலேயே இயங்குகின்றது அந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

(அ-எ-110)


## மரண அறிவித்தல்



**மாணிக்கம் கிருஷ்ணசாமி**
(லக்சுமிபவான் உரிமையாளர்
கரடிபோக்குச் சந்தி, கிளிநொச்சி)

மடத்தடிசந்தி, நுணாவில் மேற்கு சாவகச்சேரியை சேர்ந்த மாணிக்கம் கிருஷ்ணசாமி நேற்று (05.07.2023) புதன்கிழமை காலமானார்.
இறுதிக்கிரியைகள் பின்னர் அறிவிக்கப்படும்.

நுணாவில் மேற்கு,
மடத்தடி சந்தி, சாவகச்சேரி. குடும்பத்தினர்.

077 6649 396, 077 9850 260

(CR 37206) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலம்பெயர்...

இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தின் புதிய ஆளுநராகப் பதவியேற்றுள்ள பி.எஸ்.எம். சார்ள்ஸ் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ள நிலையில், மாகாணத்தின் முன்னேற்றத்துக்காக மேற்கொள்ளவுள்ள நடவடிக்கை தொடர்பில் "உதயனுக்கு" கருத்துத் தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது மாகாணத்தின் முன்னேற்றத்துக்காகப் பல்வேறு திட்டங்களைச் செயற்படுத்துவது தொடர்பில் ஆலோசிக்கப்பட்டு வருகின்றது. மாகாணத்தின் முன்னேற்றத்தை முன்னிறுத்தி மேற்கொள்ளப்படும் திட்டங்கள் எதிர்பார்க்கும் பெறுபேற்றைத் தருவதற்கு அதிகாரிகள், அரசியல்வாதிகள், பொதுமக்கள் என அனைத்துத் தரப்பினரின் ஒத்துழைப்புக்களையும் எதிர்பார்க்கின்றேன்.

முதற்கட்டமாக வடக்கு மாகாணத்தின் பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கான - பலப்படுத்துவதற்கான திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஆலோசிக்கப்படுகின்றது. புலம்பெயர்ந்தவர்களின் முதலீடுகளை வடக்கு மாகாணத்தில் அதிகரித்து பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்கான திட்டங்கள் ஆலோசிக்கப்படுகின்றன. மாகாணத்தில் முதலீடுகளை மேற்கொள்பவர்களுக்கு சலுகைகளை வழங்குவது தொடர்பாகவும் சிந்திக்கப்படுகின்றது.

சுற்றுலாத்துறையை இன்னும் விரிவுபடுத்தி, அதனூடான வருமானமீட்டலையும் வடக்குக்கு பெற்றுக்கொடுக்க வேண்டும். நகர அபிவிருத்தி அதிகாரசபையின் ஆலோசனைகளையும் பெற்று வடக்கு மாகாணத்தை முன்னோக்கிக் கொண்டு செல்ல எதிர்பார்க்கின்றேன்.

வடக்கு மாகாணத்தில் போதைப்பொருள் ஒழிப்பு, இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புகள், கல்வி நடவடிக்கைகள் தொடர்பாக பல்வேறு நடவடிக்கைகள் படிப்படியாக முன்னெடுக்கப்படும். எமது மாகாணத்தை சிறந்த மாகாணமாக மாற்றவேண்டும் என்ற அவா எனக்கு உண்டு. மாகாணத்தின் முன்னேற்றத்துக்காக நடைமுறைப்படுத்தும் திட்டங்கள் சிறந்த பெறுபேற்றைத் தருவதற்கு அனைத்துத் தரப்பினரது ஒத்துழைப்பையும் எதிர்பார்க்கின்றேன் - என்றார். (அ-எ-26)

## கரும்புலிகள்...

பொது இடங்களில் நினைவேந்தல் நிகழ்வு நடத்த பொலிஸார் மற்றும் புலனாய்வாளர்களால் தடைகள் ஏற்படுத்தப்பட்டிருந்த நிலையில், தாயக நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழுவினரால் ஒழுங்கமைக்கப்பட்ட இடத்தில் நினைவேந்தல் நடத்தப்பட்டுள்ளது.

பொது திருவுருவப் படத்துக்கு பொதுச்சுடரேற்றி, மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

நிகழ்வில் வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன் உரையாற்றினார்.

அந்நிய ஆதிக்கத்துக்குள் இருந்து கொண்டு கரும்புலிகளை நாம் நினைவில் கொள்கின்றோம். ஏனெனில் அது எமது உணர்வு. அந்த உணர்வுடன் எமது நிலம் காக்கப்பட வேண்டும் என்ற இலக்குடன் எங்கள் இயலுமைக்கு ஏற்ப போராடிக் கொண்டிருக்கின்றோம் - என்றார்.

நினைவேந்தலில் கலந்துகொண்டவர்களுக்கு தென்னங்கன்றுகளும் வழங்கப்பட்டன. (அ-எ-19)

## புதன்கிழமை...

யில்லை என்றும் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்தார்.

வாராந்தம் புதன்கிழமைகள் மக்கள் சந்திப்புக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அன்றைய தினம் பொதுமக்கள் என்னைச் சந்தித்து அவர்களின் பிரச்சினைகள் தொடர்பாக நேரடியாக என்னுடன் கலந்துரையாட முடியும். அதற்காக அவர்கள் முற்கூட்டியே எவ்விதமான பதிவுகளையும் மேற்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. பொதுமக்கள் எவ்விதத் தயக்கமும் இன்றி என்னுடன் தொடர்பு கொண்டு அவர்களின் பிரச்சினைகள் தொடர்பாகப் பேசமுடியும் என்றும் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்தார். (அ-எ-26)

## இனிமேல்...

எதிர்வரும் 16ஆம் திகதி முதல் தினசரி யாழ்ப்பாணம் - சென்னை இடையே விமான சேவைகள் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது வாரத்தில் 4 நாள்கள் மட்டுமே விமான சேவைகள் முன்னெடுக்கப்படுகின்றன. (அ-எ-5)

## ஞாயிற்றுக்கிழமைகளில்...

அதில் செயற்குழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. அந்தக் கலந்துரையாடலிலே மேற்கண்ட தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஒன்று முதல் 9 வரையான தரங்களுக்கு வெள்ளி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் தனியார் வகுப்புக்கள் நடத்தக்கூடாது என்று அண்மையில் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில், மாவட்டச் செயலர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட தனியார் கல்வி நிலைய உரிமையாளர்களும் அதற்கு இணக்கம் தெரிவித்திருந்தனர். இந்த நடைமுறை இந்த மாதம் முதலாம் திகதியில் இருந்து நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த விடயம் தொடர்பில் நேற்று தனியார் கல்வி நிலைய உரிமையாளர்கள் கூடி ஆராய்ந்துள்ளனர். வெள்ளிக்கிழமைகளில் வகுப்புக்களை நிறுத்துவதற்கு இணக்கம் தெரிவிக்கும் அவர்கள், ஞாயிற்றுக்கிழமைகளில் நண்பகல் 12 மணிக்குப் பின்னர் வகுப்புக்களை நடத்த அனுமதிக்கவேண்டும் என்று மாவட்டச் செயலரிடம் கோருவதற்குத் தீர்மானித்துள்ளனர். மாவட்டச் செயலருடன் அண்மையில் நடைபெற்ற கூட்டத்தில் அனைத்து தனியார் கல்வி நிலைய உரிமையாளர்களும் கலந்து கொள்ளவில்லை என்றும் அதனால் மீண்டும் மாவட்டச் செயலரைச் சந்தித்து இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடுவது என்றும் அவர்கள் தீர்மானித்துள்ளனர். (அ-எ-5)

## முல்லையடி...

இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

முல்லையடியைச் சேர்ந்த ராஜபாஸ்கரன் ஜதுர்சிகன் (வயது-12) என்ற சிறுவனே உயிரிழந்துள்ளார்.

வீதியின் பக்கம் மாறுவதற்காக வீதியின் ஓரம் சைக்கிளுடன் காத்திருந்த சிறுவனை யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த கப் ரக வாகனம் மோதியது என்று தெரிவிக்கப்படுகின்றது.

விபத்தை ஏற்படுத்திய கப் ரக வாகன சாரதி கைதுசெய்யப்பட்டுள்ள நிலையில், இந்த விபத்துத் தொடர்பான விசாரணைகள் பளைப் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (அ-எ-113,27)

## வவுனியா...

நடந்த விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.



வவுனியா, குருமன்காட்டைச் சேர்ந்த சிவகுமார் ரூபீன்ஸ்ராஜ் (வயது-24) என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார்.

ஹைஏஸ் வாகனமும், மோட்டார்சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளாகின. மோட்டார்சைக்கிளில் பயணித்த இளைஞரே உயிரிழந்துள்ளார்.

வவுனியா நகரில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த கனரக வாகனத்தை முந்திச் செல்ல முயன்ற இளைஞர், வவுனியா நோக்கிப் பயணித்த ஹைஏஸ் வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளார். விபத்தில் சிக்கிய மோட்டார் சைக்கிள் 600 மீற்றர் தூரம் வரை இழுத்துச் செல்லப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். விபத்தில் சம்பந்தப்பட்ட மூன்று வாகனங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. (அ-எ-110)

## சிவரூபனுக்கு...

வதற்காக, வழக்கு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 4 மற்றும் 5 ஆம் திகதிகளுக்குத் தவணையிடப்பட்டுள்ளது.

மருத்துவர் சி.சிவரூபன் தமிழீழ விடுதலைப் புலிகளை மீளுருவாக்க முயற்சித்தார் என்ற குற்றச்சாட்டில் 2019 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 18 ஆம் திகதி கிளிநொச்சி பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த அவர் கடந்த பெப்ரவரி மாதம் 9ஆம் திகதி பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

இந்த வழக்கு நேற்று கிளிநொச்சி மேல் நீதிமன்றில் மேல் நீதிமன்ற நீதிபதி ஏ.எம்.ஏ.சகாப்தீன் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. மருத்துவர் சி.சிவரூபன் மற்றும் இரண்டாவது சந்தேகநபர் ஆகியோர் நீதிமன்றில் முன்னிலையாகினர். மருத்துவர் சார்பாக ஜனாதிபதி சட்டத்தரணியும், நீதி அமைச்சின் சட்ட ஆலோசகருமான யு.ஆர்.டி.சில்வாவும், இரண்டாவது சந்தேகநபர் சார்பாக ஜனாதிபதி சட்டத்தரணி இரட்ணவேலும் முன்னிலையாகியிருந்தனர்.

இராணுவ மேஜர் தர அதிகாரியின் சாட்சிய வாக்குமூலம் நேற்றுப் பதிவு செய்யப்பட்டிருந்த நிலையில் சாட்சி மன்றுக்குச் சமுகமளிக்காததால் வழக்கு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 4ஆம், 5ஆம் திகதிகளுக்குத் தவணையிடப்பட்டது.

அதேவேளை, வாரத்தின் ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவில் மருத்துவர் சிவரூபன் கையொப்பமிட வேண்டும் என்ற பிணை நிபந்தனையை, மாதத்தின் இறுதி சனிக்கிழமைகளில் மாத்திரம் கையொப்பம் இடுவதாக மாற்றவேண்டும் என்று சட்டத்தரணிகள் ஊடாக முன்வைக்கப்பட்ட கோரிக்கையை ஏற்றுக்கொண்ட மேல் நீதிமன்று மாதத்தின் இறுதி சனிக்கிழமைகளில் கையொப்பம் இடவேண்டும் என்று உத்தரவிட்டது.

பளை, கரந்தாயில் மீட்கப்பட்ட வெடிபொருள்கள் மற்றும் தாளையடி கடற்கரைப் பகுதியில் பாறை ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வெடிபொருள் பொதி ஆகியவற்றுடன் தொடர்புள்ளது என்றும் விடுதலைப் புலிகள் அமைப்பை மீளுருவாக்க முயற்சித்தார் என்றும் குற்றஞ்சாட்டி மருத்துவர் சி.சிவரூபன் கைது செய்யப்பட்டிருந்தார். (அ-எ-113)

## காணியை...

கேப்பாபிலவு இராணுவ முகாமின் ஆரம்ப இடத்தில் இருந்து தொடங்கிய ஆர்ப்பாட்டப் பேரணி, கேப்பாபிலவு இராணுவ முகாமின் பிரதான நுழைவாயிலை அடைந்தது. அங்கு மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இராணுவத்தினர் தங்கள் காணிகளைக் கையகப்படுத்தி வைத்திருப்பதால் அன்றாட வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றது என்றும், இராணுவத்தினர் தமது காணிகளில் உள்ள வளங்களைச் சுரண்டுகின்றனர் என்றும், நந்திக்கடல் வளத்தை சுரண்டுவதற்காகவே கடற்படையினர் தங்கள் காணிகளை கையகப்படுத்தி வைத்திருக்கின்றனர் என்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் குற்றஞ்சாட்டினர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் அங்கு கதறி அழுது தங்கள் காணிகளை விடுவிக்கவேண்டும் என்று மன்றாடினார்கள். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களில் ஒருவர் அங்கு மயங்கி வீழ்ந்ததால் பதற்றமும் ஏற்பட்டது. (அ-எ-246)

## வெளிநாடு...

கடந்த ஒரு வருடமாக சந்தேகநபர் தலைமறைவாக இருந்த நிலையில் நேற்று அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பண மோசடி வழக்கில் பிணை வழங்கப்பட்ட சந்தேகநபர் கடந்த ஒரு வருடமாகத் தலைமறைவாகியிருந்தார். அவர் தேடப்பட்டு வந்தநிலையில் நேற்று நல்லூர் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 40 வயதுடைய ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார். விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர் யாழ்ப்பாணம் மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று யாழ். மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்தனர். (அ-எ-26)

## தேர்தல்கள்...

மூன்று உறுப்பினர்கள் நேற்றுத் தங்கள் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர்.

ஆணைக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்ட ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க மற்றும் உறுப்பினர்களான எம்.ஏ.பி.சி. பெரேரா, அமீர் மொஹமட் பைஸ் ஆகியோரே தங்கள் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர். (அ-எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மனித உடல் எச்சங்கள் மீட்கப்பட்ட

# கொக்குத்தொடுவாயில் இன்று அகழ்வுப் பணிகள்



யாழ்ப்பாணம், ஜூலை 6
முல்லைத்தீவு, கொக்குத் தொடுவாயில் மனித உடல் எச்சங்கள் மீட்கப்பட்ட இடத்தில் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய இன்று அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

கடந்த 29ஆம் திகதி தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர் நீர் இணைப்பு வழங்குவதற்காக அகழ்வு நடவடிக்கை மேற்கொண்டபோது மனித உடல் எச்சங்களும், பெண்களின் ஆடைகளும் மீட்கப்பட்டிருந்தன. இது தொடர்பில் நீதிமன்றத்துக்கு அறிக்கையிடப்பட்ட நிலையில், நீதிவான் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டதுடன், மேலதிக அகழ்வு நடவடிக்கைகள் 6 ஆம் திகதி நடைபெறும் என அறிவித்திருந்தார். (எ)

# மத நல்லிணக்கத்துக்காக புதிய சட்டம் உருவாகும்!

### அமைச்சர் விதுர தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 6
மத நல்லிணக்கத்துக்கு குந்தகம் விளைவிக்கும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் எதிராக புதிய சட்டம் அறிமுகம் செய்யப்படும் என்று புத்தசாசன மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சிலர் மத சுதந்திரம் என்ற போர்வையில் ஏனைய மதங்களை விமர்சிக்கிறார்கள். மத சுதந்திரம் என்ற போர்வையில் எந்த மதத்தையும் ஒடுக்கவும், மத நல்லிணக்கத்தை அச்சுறுத்தவும் யாருக்கும் உரிமை இல்லை. இது தொடர்பாகச் சட்ட நடவடிக்கை எடுக்க புதிய சட்டமொன்றைக் கொண்டுவர எதிர்பார்க்கிறோம். எந்த மதத்தையும் இழிவுபடுத்தாத வகையில் அதற்கான சட்ட வரைவை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. தொல்பொருள்கள் விவகாரத்தில் தொல்பொருள்கள் ஆணையை மீறி யாரும் செயற்பட முடியாது. தொல்லியல் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் சட்டத்தை நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கிறோம். தொல்பொருள் கட்டளைச் சட்டத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பின் அதை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து திருத்தம் மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது. அதுவரை, தற்பொழுதுள்ள தொல்பொருள்கள் கட்டளைச் சட்டம் நடைமுறையில் இருக்கும். ஒழுக்கக் கேடான செயல்களில் ஈடுபடும் அல்லது சாசனத்தை அவமதிக்கும் வகையில் செயற்படும் பிக்குமார்கள் தொடர்பில் மகாசங்கத்தினர் செயற்படவேண்டும் - என்றார். (அ-எ,இ)


DHL துரித பொதிகள் சேவை
சகல நாடுகளுக்கும் கடிதங்கள், பொதிகள்
3-5 வேலைநாட்களில் ஒப்படைக்கப்படும்
திருமுருகன் கொம்நெற்
321, K.K.S. Road, Jaffna.
T.P: 0777 55 45 28

**பணியாளர்கள் தேவை**
கொக்குவில் சந்தியில் இயங்கும்
**பாக்யா காகிதாதிகள்**
நிலையத்துக்கு விற்பனை
உதவியாளர்கள் தேவை.
(பெண்கள் மட்டும்)
(CS/51132)AH-1
121, K.K.S வீதி,
கொக்குவில்.

**மணமகள் தேவை**
யாழ். இந்து கார்த்திகை நட்சத்திரம், உதயத்துச் செவ்வாய். 1982ஆம் ஆண்டு பிறந்த சொந்தத் தொழில் புரியும் (பதிப்பக உரிமையாளர்) மணமகனுக்கு பெற்றோர் மணமகளைத் தேடுகின்றனர்.
தொடர்பு:
077 470 3521

**காணி விற்பனைக்கு உண்டு**
யாழ்ப்பாணம் புத்தூரில் 30 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும்
* பிரதான காபற் வீதி முகப்புடன்
* புத்தூரில் தண்ணீர் தாங்கி அருகாமை (நிலப்பரப்பு)
* மூன்று பரப்பாகவும் இரண்டரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
* வியாபார நிலையங்கள் திருமண மண்டபங்கள் வீடு அமைப்பதற்கு உகந்த இடம்.
* சுன்னாகம் சாவகச்சேரி செல்லும் அரச தனியார் பேரூந்துகள் அதிகம் பயணிக்கும் பிரதான வீதி.
* காபற் வீதி முகப்புடன் ஒரு பரப்பு மூன்று இலட்சம் ரூபாய் பின் துண்டுகள் 1 பரப்பு ஒரு இலட்சத்தி ஐம்பது ஆயிரம் ரூபாய் மட்டும்.
* பார்வையிடும் நேரம் காலை 06 மணிமுதல் மாலை 06 மணிவரை.
* நன்னீரூற்று.
தொடர்பு:
076 8260 354, 076 0570 354

**காணி விற்பனைக்கு**
யாழ்ப்பாணம் நவக்கிரி பகுதியில் 34 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
**நிலப்பரப்பு**
✓ நவக்கிரி மாணிக்கப் பிள்ளையார் கோயில் வீதியில்.
✓ 18 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
✓ 3 வருடம் பூர்த்தி அடைந்த தென்னைகளும் உள்ளன.
✓ நிலாவரை வற்றாக் கிணற்றில் இருந்து 1 km தூரம்.
✓ நன்னீரூற்றுச் சூழல்
✓ 1 பரப்பின் விலை 1200000/= (பன்னிரண்டு இலட்சம்)
**பார்வையிடும் நேரம் :-**
காலை 6.00 மணி தொடக்கம்
மாலை 6.00 மணிவரை.
தொடர்புகளுக்கு :- ஜெயம்
077 81 47 389
077 98 65 457

**மணமகள் தேவை**
01. பருத்தித்துறை. இந்து கௌரவகுலம் (V). 1975. மிருகசீரிடம். Supermarket Manager, Divorce, UK Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 34587
02. மானிப்பாய். இந்து கௌரவகுலம் (V). 1978. உத்தராடம். BSc (Hons) Divorce, Australia Citizen. மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 33259
03. பளை. இந்து கௌரவகுலம் (V). 1984. அவிட்டம் Phd, UK Citizen, Divorce மணமகனுக்கு மணமகள் தேவை.
04. காரைநகர். இந்து கௌரவகுலம் (V). 1986. சித்திரை. BSc in Information and Communication Technology, UK Citizen. மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 27042
05. கரவெட்டி. இந்து கௌரவகுலம் (V). 1986. திருவோணம். BA (Hons), CIMA Completed UK Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 26504
06. நெடுந்தீவு. இந்து கௌரவகுலம் (V). 1978. பூசம். A/L, Own Business, UK Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 25258
07. காரைநகர். இந்து கௌரவகுலம் (V). 1975. விசாகம். MSc, UK Citizen. மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 25104
தொடர்புகளுக்கு- S.Sharma J.P Astrologer Phone - 077 539 3728 Whatsapp - 077 803 8193
(CS/51130)AH-1




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.07.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org